வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 25.07.2024 வியாழக்கிழமை இதழ் : 207 பக்கங்கள் : 12

# ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொது தேர்தலை நடத்த திட்டம்?

கொழும்பு, ஜூலை 25

**ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக புதிய அரசாங்கம் அமைக்கப்படும். இதற்காக தற்போதைய பாராளுமன்றம் விரைவில் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்படும் என்று கொழும்பு அரசியல் உயர்வட்டாரங்கள் மூலம் அறிய வருகின்றது.**

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதானால் பிரதமர் பதவி தமது கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என்று நேற்றைய தினம் மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நடந்த சந்திப்பில் பொதுஜன பெரமுன கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ முக்கிய நிபந்தனை விதித்திருந்தார். இந்த நிபந்தனையை அடுத்தே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலில் பாராளுமன்றத் தேர்தலை நடத்தும் முடிவை எடுத்தார் என்று கூறப்படுகின்றது.

இதேசமயம், தற்போதைய நிலைமையில் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதன் மூலம் தனக்குச் சாதகமான நிலைமையையும் எதிர்க்கட்சிக்கு பலவீனமான நிலைமையையும் ஏற்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி கருதுகிறார். எனவே, தனக்குள்ள தற்துணிவு அதிகாரத்துக்கு அமைய தற்போதைய பாராளுமன்றத்தை கலைத்து முதலில் பொதுத் தேர்தலை எதிர்கொள்ள விரும்புகிறார்.

அரசமைப்பு விதிகளின்படி தற்போதைய பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளது.

இதுபோல, 11

# துப்பாக்கிச் சூட்டில் விவசாயி படுகாயம்!

## முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு, ஜூலை 25

அறுவடை செய்த நெல்லை வீதியில் காயவைத்துவிட்டு, காவலுக்கு படுத்திருந்தவர் மீது நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இதில், அவர் படுகாயமடைந்தார்.

முல்லைத்தீவு - துணுக்காய் - கல்விளான் 11

# வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை தினம் இன்று!

யாழ்ப்பாணம், ஜூலை 25

வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட 53 தமிழ் அரசியல் கைதிகளின் நினைவேந்தல் நிகழ்வு இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

"வெலிக்கடை சிறைப் படுகொலை" 11

# தேர்தலை பிற்போடுவதற்காக அரசமைப்பை மீறமாட்டோம்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஜூலை 25

தேர்தலை பிற்போடுவதற்காக அரசாங்கம் ஒருபோதும் அரசமைப்புக்கு புறம்பாக செயல்படாது என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நிலையான அரசாங்கத்தை அமைப்பதற்கு முதலில் அரசமைப்பு ரீதியிலான ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். அடுத்த வருடம் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஸ்திரமற்ற நிலையில் இருந்த நாட்டை தற்போதைய 11

# பொலிஸ் மா அதிபராக செயல்பட தேசபந்து தென்னக்கோனுக்கு தடை!

கொழும்பு, ஜூலை 25

பொலிஸ் மா அதிபராக செயல்பட தேசபந்து தென்னக்கோனுக்கு உயர் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவை நேற்று புதன்கிழமை பிறப்பித் தது.

இதன்படி, இந்த இடைக்கால தடை உத்தரவு அமுலில் இருக்கும் காலப்பகுதியில் பொலிஸ் மா அதிபர் பதவிக்கு சட்டத்துக்கு அமைய பொருத்தமான ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு 11



# எமது தேசத்தின் இறைமையை அங்கீகரியுங்கள்!

## கஜேந்திரன் எம். பி.

கொழும்பு, ஜூலை 25

சிங்கள மக்களுடன் இணைந்து இந்த நாட்டைக் கட்டியெழுப்ப நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால், இந்த நாட்டில் ஒற்றையாட்சி முறை ஒழிக்கப்பட்டு சமஷ்டி அரசமைப்பு கொண்டு 11

# பெரமுனவின் 50 எம்.பிக்கள் இப்போது ரணிலின் பக்கம்?

## மேலும் சிலருக்கு வலை

கொழும்பு, ஜூலை 25

ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடைபெறும் என எதிர்ப்பார்க்கப்படும் நிலையில், சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் 50இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பக்கம் சாய்ந்துவிட்டனர். இந்தநிலையில், மேலும் பலரை வளைத்துப் போடும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச் சர் பிரசன்ன ரணதுங்க, சிறீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் 11

## பொலிஸ் மா அதிபர் விவகாரம்

# அமைச்சரவையின் பதில் இன்னும் இரு நாட்களில்!

கொழும்பு, ஜூலை 25

பொலிஸ் மா அதிபர் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் சட்ட அம்சங்களை ஆராய்ந்து அடுத்த இரண்டு நாட்களுக்குள் அமைச்சரவையின் பதிலை அறிவிவிக்க நேற்றுக்கூடிய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

மைச்சரவையின் விசேட கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

பொலிஸ் மா அதிபர் தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பில் அமைச்சரவை 11

# சட்டவிரோத கொல்களம்; ரூ. 4.2 இலட்சம் அபராதம்!

யாழ்ப்பாணம், ஜூலை 25

நாவாந்துறையில் சட்டவிரோத கொல்களம் நடத்திய மூவருக்கு 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தது யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றம்.

நாவந்துறை பொது சுகாதார பரிசோதகர் பிரிவில், பொது சுகாதார பரிசோதகர் எஸ். உதயபாலா தலைமையிலான குழுவினர் கடந்த 2023 ஜனவரி 3ஆம் திகதி நடத்திய பரிசோதனையில் சட்டவிரோதமாக இயங்கிய மாடுகள் கொல்களம் ஒன்று பிடிபட்டது. அத்துடன், 150 கிலோவுக்கு மேற்பட்ட மாட்டிறைச்சியும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. 11

# மன்னிப்பு மட்டும் கேட்டு அரசாங்கம் தப்பமுடியாது

## முஸ்லிம் எம். பிக்கள் போர்க்கொடி!

கொழும்பு, ஜூலை 25

கோவிட் தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரித்துவிட்டு - எல்லாவற்றையும் செய்துவிட்டு மன்னிப்பு மாத்திரம் கோரி முடித்துக்கொள்ள முடியாது என்று நேற்றைய தினம் பாராளுமன்றில் முஸலிம் எம். பிக்கள் தெரிவித்தனர்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், 11

# இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும்!

## கனடிய பிரதமர் வலியுறுத்து

றொறன்ரோ, ஜூலை 25

பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு எதிரான மனித உரிமைகள் மீறல், துஷ்பிரயோகங்கள் குறித்து இலங்கை பொறுப்புக்கூற வேண்டும் என்று கனடா தொடர்ந்தும் கோருவதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கறுப்பு ஜூலையின் 41ஆவது ஆண்டை 11

# பரீட்சை நாட்காட்டியை திருத்துவதற்கு திட்டம்!

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 25

பரீட்சைகள் நாட்காட்டியைப் புதுப்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பிட்டிபனையில் உள்ள களஞ்சியசாலையில் பாடசாலை பாடப்புத்தகங்களை விநியோகிக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட போதே கல்வி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

பிரபல வர்த்தகர் ஒருவர் வியாபார விடயமாக வெளியூர் சென்றிருந்தார்.

வியாபார அலுவல்கள் முடிந்த பிறகு அன்று இரவுப் பொழுதைக் கழிப்பதற்காக ஒரு விடுதியில் தங்கினார். மிகவும் சாதாரணமாக உடையணிந்திருந்த அந்தப் பிரபல வர்த்தகரை விடுதி வேலைக்காரர்கள் கொஞ்சமும் மதிக்கவில்லை. சரியானபடி உபசரிக்கவில்லை.

இரவு திடீரென அவருக்குத் தண்ணீர் தாகம் எடுத்தது.

வேலைக்காரர்களைக் கூப்பிட்டு தமக்குக் குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்று கேட்டார். வேலைக்காரர்களோ அவரைக் கொஞ்சமும் லட்சியம் செய்யவில்லை. கும்பலாக அமர்ந்து கதை பேசிக் கொண்டிருந்தனர்.

அவருக்கோ தாகம் அதிகமாக இருந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தார். அவருக்கு யோசனையொன்று தோன்றியது.

திடீரென அவர் "நெருப்பு... நெருப்பு! நெருப்பு பற்றிக் கொண்டு விட்டது" எனக் கூக்குரல் போட்டார்.

வேலைக்காரர்கள் பதறியடித்துக் கொண்டு ஆளுக்கு ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு ஓடி வந்தார்கள்.

அவரைப் பார்த்து "எங்கே தீப்பற்றிக் கொண்டது?" என்று பரபரப்புடன் கேட்டார்கள். அவர், சர்வசாதாரணமாக ஒரு குவளையை எடுத்து அவர்கள் கொண்டு வந்திருந்த பாத்திரம் ஒன்றிலிருந்து நீரை எடுத்து வயிறாரக் குடித்தார். அவர் தாகம் அடங்கியது.

"நெருப்பு பற்றிக் கொண்டதாகச் சொன்னீரே எங்கே?" என்று வேலைக்காரர்கள் கேட்டார்கள். நெருப்பு என் வயிற்றில்தான் பற்றிக் கொண்டு எரிந்தது. இப்போது தண்ணீர் விட்டு அணைத்து விட்டேன் என்று கூறிவிட்டுச் சிரித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றதும், அவர் ஒரு இலட்சம் சிற்றூழியர்களை அரச சேவையில் இணைக்கப்போவதாக அறிவித்தார். அதனைத் தொடர்ந்து அந்த சிற்றூழியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அவற்றிலிருந்து மாவட்டங்கள் வாரியாக ஒரு இலட்சம் பேர் வேலைக்கு அமர்த்தப்படுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன.

இந்த வேளையில்தான் பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. அப்போது ஆளும் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்ட ஒரு வேட்பாளர், யாழ்ப்பாண மாவட்டத்தில் அந்த சிற்றூழியர் பதவிக்காக தெரிவுசெய்யப்பட்டு நியமனம் வழங்குவதற்கு தயாராக இருந்தவர்களின் பெயர் விவரங்களை மாவட்ட செயலகத்திலிருந்து எடுத்து, அவர்கள் அனைவருடனும் தொடர்பு கொண்டு - தனக்கு தேர்தலில் வாக்களித்தால் அந்த நியமனங்களை பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

அவரது தேர்தல் பிரசாரமே அதிலிருந்துதான் தொடங்கியது. அதனால் அவர் கணிசமான வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்கும் தெரிவாக முடிந்தது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக பிற்காலத்தில் அந்த நியமனங்கள் வழங்குவதை ஜனாதிபதி கோட்டாவே தாமதிக்கவேண்டி வந்ததும். அது பின்னர் இல்லாமலே போனதும் பழைய சம்பவங்களாகிவிட்டன.

இப்போது தெற்கில் கிராமங்கள் தோறும் மக்கள் "அந்த" விண்ணப்பப் படிவத்திற்காக ஆயிரக்கணக்கில் முண்டியடிக்கின்றனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார சிறந்த அரசியல்வாதி என்பது நமக்குத் தெரிந்ததுதான். பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் இருந்த போது தனது வாதத் திறமையால் பாராளுமன்றத்தில் பலரின் கவனத்தையும் ஈர்ப்பவர். ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதும் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஜனாதிபதியுடன் இணைந்துகொண்டவர். தொழில் அமைச்சராகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராகவும் இருந்து மிகச்சிறப்பாக பணியாற்றி வருகிறாரெனக் கூறப்படுகின்றது. அவர் அண்மையில் ஓர் அறிவிப்பை செய்தார். அதாவது, இஸ்ரேல் நாட்டில் வேலைவாய்ப்புக்காக ஐம்பதாயிரம் பேரை அங்கு அனுப்பவிருப்பதாகவும் அந்த வேலையில் சேர்வதற்கு விரும்புபவர்களை அதற்காக விண்ணப்பிக்குமாறும் அழைப்பு விடுத்ததுடன் - அந்த விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வதற்காக மாவட்டம் தோறும் குறிப்பிட்ட தினத்தில் அதிகாரிகள் அந்த அந்த மாவட்டங்களுக்கும் விஜயம் செய்வார்கள் என்றும் விடுக்கப்பட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, தெற்கில் கிராமங்கள் தோறும் இளைஞர், யுவதிகள் அந்த விண்ணப்பத்தை கையளிப்பதற்காக மாவட்டங்கள்தோறும் அதிகாரிகளுக்காக காத்திருக்கின்றனர்.

அவர்கள் செல்லும் இடங்கள் எங்கும் ஒவ்வொரு இடங்களிலும் பல ஆயிரக்கணக்கானவர்கள் முண்டியடிப்பதை காணமுடிகின்றது என்கிறார் தெற்கின் மூத்த ஊடகவியலாளர் ஒருவர்.

இது நமது இளைஞர்களின் தற்போதைய மனநிலையை காட்டுகின்றது என்கிறார் அந்த ஊடகவியலாளர்.

அதுவல்ல நமது கவனத்தை பெற்றது. ஐம்பதாயிரம் பதவிகளுக்காக பல இலட்சம் இளைஞர், யுவதிகள் இவ்வாறு பதிவுசெய்கின்றனர். ஆனால், அவர்களுக்கான நியமனங்கள் ஜனவரியில்தான் வழங்கப்படவிருக்கின்றனவாம். அதுவும் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஆட்சியில் இருந்தால்தான், இஸ்ரேல் நாட்டிலிருந்து கிடைத்திருக்கும் இந்த வேலைவாய்ப்புக்கான "கோட்டா" கிடைக்குமாம்.

மனுஷ நாணயக்காரவின் தேர்தல் பிரசாரம் வித்தியாசமாகத்தான் இருக்கின்றது.

இனி என்ன இஸ்ரேலுக்கு வேலைக்கு செல்ல விரும்பும் இந்த இலட்சக்கணக்கான இளைஞர்கள் ரணில் வெற்றிபெறவேண்டும் என்று தங்கள் தங்கள் குலதெய்வங்களை வேண்டிக்கொள்வார்களோ என்னவோ?

மேலே சொன்ன வர்த்தகரின் சமயோசித புத்திதான் மனுஷவின் இந்த முயற்சியை அறிந்தபோது ஞாபகத்துக்கு வந்தது.

- ஊர்க்குருவி.

## முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்பு தொடர்பான பெயர்ப் பட்டியலை வெளியிடாதமை ஏன்?

### ரவூப் ஹக்கீம் கேள்வி

கொழும்பு, ஜூலை 25

முஸ்லிம் களின் ஜனாஸா எரிப்பு தொடர்பான பட்டியலை தற்போதை சுகாதார அமைச்சரிடமும், முன்னாள் அமைச்சரிடமும் தான் கோரிய போதும் அந்த பட்டியலில் இல்லை என மறுத்ததன் கார்ணம் என்ன என பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று இடம்பெற்றுள்ள பாராளுமன்ற உரையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

தகனக்கிரியை பற்றி அமைச்சரவை மன்னிப்பு கோர தீர்மானித்துள்ளது. மேலதிகமாக இதன் காரணமாக நாங்கள் பல பாதிப்புக்கு உள்ளாகியுள்ளோம். அதைப்பற்றி கதைத்திருக்கிறேன். சுகாதார அமைச்சர் இங்கே இருக்கின்றார். இந்த சபையில் முன்னாள் அமைச்சரிடமும் இது பற்றி கேட்டேன். இது தொடர்பான வினாவினை சமர்ப்பித்திருந்தேன். அதாவது தகனக்கிரியைக்குரிய ஆட்களின் பெயர்ப் பட்டியலை கோரியிருந்தேன். இருந்தபோதிலும் அவர்கள் அதற்குரிய பெயர் பட்டியல், இல்லை என்று கூறியிருந்தார்கள். இது உண்மையிலேயே விடயங்களை உண்மையை மறைப்பதற்கான முயற்ச்சியாகும். எத்தனை ஆட்களை தகன கிரியைக்கு உட்படுத்தினீர்கள்? அவர்களின் சொந்தக்காரர்கள் யார்? என்பது பற்றிய விளக்கம் தரவேண்டும்.எல்லாவற்றையும் செய்த பின்னர் நீங்கள் மன்னிப்பு கோருகிறீர்கள். இது தொடர்பான பதிலை நான் உங்களிடம் எதிர்பார்க்கின்றேன் - என்றார். (அ)

## கிளிநொச்சி மீனவருக்கு சீனாவிடமிருந்து அரிசி

கொழும்பு, ஜூலை 25

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் சீனா அரசாங்கத்திடமிருந்து கடற்றொழிலாளர்களுக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட அரிசி வழங்கும் செயற்றிட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த அரிசி அடங்கிய இரண்டு கொள்கலன்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கனரவாகனமொன்றில் கிளிநொச்சி மாவட்டத்தை வந்தடைந்தது.

இந்நிலையில், குறித்த அரிசி வழங்கும் நிகழ்வு பூநகரி கடற்றொழில் அலுவலகத்தில் நேற்று காலை 9:30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பா.ரமேஸ்கண்ணா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சரும், மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான டக்ளஸ் தேவானந்தா, மாவட்ட அபிவிருத்தி குழு இணைப்பாளர் இட்ணம் அமீன் கலந்து கொண்டு குறித்த செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் கடற்றொழில் திணைக்களம் ஊடக 2,981 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு இருபது கிலோகிராம் அரிசி வீதம் வழங்கப்படவுள்ளது.

தொடர்ந்து, இந்த அரிசி பளை, கண்டாவளை, பூநகரி, நாச்சிக்குடா ஆகிய நான்கு கடற்றொழில் அலுவலகங்கள் ஊடக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பூநகரி கடற்றொழில் அலுவலக உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளத்தின் தலைவர், மாவட்ட அபிவிருத்தி குழு அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (அ)

## தபால் மூலம் வாக்களிக்கும் உரிமை ஊடகவியலாளர்களுக்கும் வேண்டும்

### இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார

கொழும்பு, ஜூலை 25

ஊடகவியலாளர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்கும் உரிமையை வழங்குமாறு வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார கோரிக்கை விடுத்தார்.

இலங்கையில் 17 தொலைக்காட்சி அலைவரிசைகளும் 52 வானொலி அலைவரிசைகளும் உள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், இந்த நிறுவனங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளதால் வாக்களிக்கும் வாய்ப்பு கிடைப்பதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

"எனவே ஊடகவியலாளர்களுக்கு தபால் மூல வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டுமென நான் முன்மொழிகிறேன்" வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார மேலும் தெரிவித்தார். (அ)

## யுக்திய நடவடிக்கையில் 661 பேர் கைது

கொழும்பு, ஜூலை 25

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக் கையின் போது போதைப் பொருள் குற்றம் தொடர்பில் 661 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட வர்களில் 652 ஆண்களும் 09 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 21 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், 18 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமி ருந்து 1,256 கிராம் 428 மில்லிகிராம் ஹெரோயின், 434 கிராம் 667 மில்லிகிராம் ஐஸ், 653 கிராம் 688 மில்லி கிராம் கஞ்சா மற்றும் 18, 014 கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

## அதிகரித்த டெங்கு நுளம்பு பெருக்கம்

கொழும்பு, ஜூலை 25

அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழிற்சாலைகளில் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் வேகமாக அதிகரித்துள்ளதாக பூச்சியியல் ஆய்வு அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

[illegible]கள் உள்ளதாக இனங் காணப்பட்ட பகுதிகளில் விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என பூச்சியியல் ஆய்வு அதிகாரிகள் சங்க தலைவர் நஜித் சுமன சேன குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் விளக்கமளித்த நஜித் சுமனசேன,

டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்த இவ்வாறான அபாயகரமான நிலைமைகள் உள்ள பகுதிகளில் சுமார் 60 க்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
25.07.2024 வியாழக்கிழமை
குரோதி வருடம், ஆடி 09

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கறுப்பு ஜூலையும் ஜனாதிபதி வேட்பாளர்களும்...!

கறுப்பு ஜூலை ஆண்டுதோறும் நினைவு கொள்ளப் படுகின்றது. ஒவ்வோர் அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் போட்டிபோட்டுக் கொண்டு இதனை நினைவுகொள்வதுண்டு. இதன்மூலம், தாங்கள் தமிழ்த் தேசிய அரசியலுடன் ஒன்றித்துப் பயணிப்பதாக நிரூபிக்க முடியுமென்று நம்புகின்றனர். 2009இற்கு பின்னரான அரசியல் சூழலில் தமிழ் மக்களின் அரசியல் என்பதே நினைவுகூரலாகத்தான் சுருங்கிக் கிடக்கின்றது. செயலை விடவும் நினைவுகூரல்களை செய்வதையே தமிழ்த் தேசிய அரசியல் தரப்பினரும் ஓர் இலகு அரசியலாக முன்னெடுத்து வருகின்றனர்.

ஆனால், நினைவுகூரல்களின்போது நினைத்துக்கொள்ள வேண்டிய விடயம் என்ன? தமிழ் மக்கள் கடந்த ஒரு நூற்றாண்டாக அரசியல் ரீதியில் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றனர். பின்தங்கியநிலை என்பது அறிவு சம்பந்தப்பட்டதல்லமாறாக, அடைவு சம்பந்தப்பட்டது. அறிவு அடைவை தரவில்லையாயின், அந்த அறிவால் பயன் என்ன?

அரசியல் என்பது அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரு தொடர் செயல்பாடு. அந்தத் தொடர் செயல்பாட்டில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் தோற்றுக் கொண்டேயிருக்கின்றனர் - ஏன்? கறுப்பு ஜூலை தொடங்கி முள்ளிவாய்க்கால் வரையில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அனைத்து அநீதிகளுமே அவர்களின் தோல்வியின் அடையாளங்கள்தான். நவீன அரசியலில் ஒப்பாரிகளுக்கும் ஆவேசங்களுக்கும் பொருளில்லை. விவேகத்துக்கும் தந்திரோபாயத்துக்குமே பொருள் உண்டு.

ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளவுள்ள நிலையில்தான் கறுப்பு ஜூலையை தமிழ்த் தேசிய தரப்பினர் நினைவு கொள்கின்றனர். இந்த நினைவேந்தலின்போது இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த இரண்டு வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர். மறுபுறமாக, கறுப்பு ஜூலையில் தமிழர்களின் சொத்துகளை இலக்கு வைத்த அரசியல் பாசறையில் வளர்ந்த இன்னொருவரும் போட்டியிடுகின்றார். இவ்வாறான சூழலில் இவர்களுக்கு வாக்களியுங்கள் என்று தமிழ்த் தேசிய கட்சிகள் கூறமுடியுமா? தமிழ் அரசுக் கட்சியால் அது முடியுமா? தமிழ் பொது வேட்பாளரை தோற்கடிப்பேன் என்று சுமந்திரனால் கூற முடியுமா?

இம்முறை கறுப்பு ஜூலையின் நினைவுகூரல் தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு சவாலானது. ஏனெனில், கறுப்பு ஜூலையின் சூத்திரதாரிகளை உருவாக்கிய கட்சியினர்தான் தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்களாக இருக்கின்றனர். இவர்களை நிராகரித்து தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி - அவரை நோக்கி தமிழ் மக்களை அணிதிரட்டுவதுதான் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலையாய பணியாக இருக்க வேணடும்.

இந்தப் பின்புலத்தில் சிந்தித்தால் தமிழ்த் தேசிய கட்சிகளின் கறுப்பு ஜூலை பிரகடனமாக இருக்க வேண்டியது - தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தி தமிழ் மக்களின் அரசியல் ஒற்றுமையை காண்பிக்க வேண்டும் என்பதே.

## பயிற்சி பட்டறை

யாழ்ப்பாணம்,ஜூலை 25

குரல் பண்பாடு பயிற்சி பட்டறை இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த பயிற்சி பட்டறையில் வளவாளராக இந்தியாவின் தமிழ்நாட்டை சேர்ந்தவரான டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழக துணை வேந்தரான எஸ். சௌமியா பங்கேற்கவுள்ளார்.

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 25

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான சண்முகவிலாச மண்டபத்தில் சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்று வருகிறது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் ஆற்றுவார்.

இதைத் தொடர்ந்து சிறப்பு சொற்பொழிவை சைவப்புலவர் க. கயிலைநாதன் "கதிர்காம பெருமாளே" என்னும் தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஜூலை 25

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

15ஆவது தொடராக நடக்கும் இந்த சொற்பொழிவு நவாலி தெற்கு அருள்மிகு நாகராஜா இராஜேஸ்வரி ஆலய பிரதான மண்டபத்தில் நாளை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு வணக்கத்தை தொடர்ந்து சொற்பொழிவை இளம் சைவப் புலவர் நித்திய பாபுதரன் "மாணிக்கவாச கரும் திருத்தோணோக்கமும்" என்னும் தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

## திருவையாறு மகா வித்தியாலய பொன்விழா மூன்று நாட்களுக்கு

கிளிநொச்சி, ஜூலை 25

கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலயத்தின் பொன் விழா நிகழ்வுகள் அதிபர் கி. விக்னராஜா தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாள்கள் காலை மாலை அமர்வுகளாக நடைபெறவுள்ளன.

நாளை காலை நடைபவனி நடைபெறும் இதன் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி. சின்னராசா கலந்து கொள்வார். அன்று மதியம் சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் க. சிவேந்திரம் பிரதம விருந்தினராகப் பங்கேற்க மரநடுகை நிகழ்வு நடைபெறும் அன்று மாலை கிளிநொச்சி தெற்கு கல்வி வலய உடற்கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப. பார்த்திபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி நடைபெறும்.

மறுநாள் சனிக்கிழமை இலங்கையின் நிலவுருவ அமைப்பு பாடசாலையில் நிறுவப்பட்டுக் கையளிக்கப்படும் இதன் பிரதம விருந்தினராக மருத்துவர்களான சாந்தகுணாகரன் தம்பதியர் கலந்து கொள்வர். அன்று மதியம் விஞ்ஞான ஆய்வு கூடத் திறப்பு விழா இடம்பெறும். இதன் பிரதம விருந்தினராக வடமாகாண விஞ்ஞானபாட பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. நிருபராணி கலந்து கொள்வார். அன்றுமாலை வைத்தியர் வி. ஜெக்கப்சன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள பரிசளிப்பு விழா நடைபெறும்.

நிறைவுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை பொன்விழா மலர் வெளியீடு இடம் பெறும். இதன் பிரதம விருந்தினராக கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் பிரதீபா காயத்திரி கஜபதி கலந்து கொள்வார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் மலரின் வெளியீட்டுரையை ஆற்றுவார்.

அன்று மாலை பாடசாலைக்குப் பெருமை சேர்த்தோருக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறும். இதன் பிரதம விருந்தினராக கிளிநொச்சி தெற்கு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந. காண்டீபன் கலந்து கொள்வார். அன்றையதினம் சிறப்பு நிகழ்ச்சியாக செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசனை நடுவராகக் கொண்டு சொற்சமர் விவாத நிகழ்ச்சி இடம்பெறும். (அ)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஜூலை 25


இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்துக் கற்கைகள் நிறுவகத்தால் நடத்தப்படும் ஆன்மீக பிரசாரகர் அடிப்படை சான்றிதழ் கற்கைநெறியின் புதிய பிரிவு ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் ஓகஸ்ட் 15ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஆறு மாத காலம் பிரதி சனிக்கிழமைகளில் மட்டும் நடைபெறும் இந்தக் கற்கைநெறிக்கு 12 வயதுக்கு மேற்பட்ட இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தப் பயிற்சி நெறியானது "இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், சிறீலசிறீ ஆறுமுக நாவலர் பயிற்சி நிலையம், ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்", "இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், சுவாமி விபுலாநந்தர் பயிற்சி நிலையம், இந்து கலாசார நிலையம், புதிய கல்முனை வீதி, நாவற்குடா, மட்டக்களப்பு"ஆகிய முகவரிகளில் அமைந்துள்ள பிராந்திய பணிமனைகளில் நடைபெறும்.

இந்தக் கற்கைநெறியில் இணைந்து கொள்ள விரும்புவோர் அந்தந்த பிராந்திய பணிமனைகளில் விண்ணப்பப் படிவத்தை பெற்று, பூர்த்தி செய்து பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் யாழ்ப்பாணம் - க. சிந்தூரன் - 077 677 6249, மட்டகளப்பு - சுகன்யா மகாதேவா - 075 262 6981 ஆகியோருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 25 வியாழக்கிழமை
குரோதி வருடம் - ஆடி 09
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : பஞ்சமி




**மேடம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். மற்றவர்களின் மனநிலையை உணர்ந்து பேசும் பக்குவம் உண்டாகும். புது தொழில் தொடங்குவீர்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். சதிக்கும் நாள்.

**இடபம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். கடமையுணர்வுடன்செயல்படவேண்டும்.

**மிதுனம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். உற்சாகமான நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும்.

**சிம்மம்**
சகோதரர்கள் வகையில் ஒற்றுமை பிறக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**கன்னி**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**துலாம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். பழைய நினைவுகளில் மூழ்கும்.

**தனுசு**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நினைத்தை முடிப்பீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**மகரம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். இனிமையான நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்'களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். சக ஊழியர்களால் அவ்வப்போது டென்ஷன் ஆவீர்கள்.

**மீனம்**
குடும்பத்தில் விட்டு கொடுத்துபோவது நல்லது. சகோதரர் வகையில் மனஸ்தாபம் வந்து நீங்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

# இந்த ஆண்டில் 250 மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது!

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு

சென்னை, ஜூலை 25

“இந்த ஆண்டில் இதுவரை மட்டும் 250 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த 10 ஆண்டுகளில், ஒர் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மிக அதிகபட்ச கைது எண்ணிக்கை இது. இலங்கைக் கடற்படையினரால் சிறைப் பிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும் அவர்களின் மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்” - இவ்வாறு வலியுறுத்தி வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில்,

மீனவர்கள் இதுபோன்று அச்சுறுத்தப்படுவதும், கைது செய்யப்படுவதும் அவர்களின் மீன்பிடி படகுகள், கருவிகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்ந்து தடையின்றி நடைபெற்று வருகிறது. இதனால் மீனவ மக்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

எனவே, இந்த நிலைமையைத் தணித்திட உரிய தூதரக முயற்சிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும். பிரச்னையின் தீவிரத்தை உணர்ந்து இலங்கையிலிருந்து 87 மீனவர்களையும், 175 படகுகளையும் விரைவாக விடுவித்திட தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றும் கூறியுள்ளார். (ஐ)

# தமிழையும் தமிழ்நாட்டையும் மறந்தும்கூட உச்சரிக்கவில்லை

## நிதி அமைச்சரை சாடும் தமிழக எம். பி.

புதுடில்லி, ஜூலை 25

தமிழையும் தமிழ்நாட்டையும் மறந்தும்கூட உச்சரிக்காமல் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தவிர்த்திருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ்கனி விமர்சித்துள்ளார்.

மத்திய அரசின் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் அவர் மேலும் கருத்துரைக்கையில்,

”பாராளுமன்றத்தில் மத்திய நிதிநிலை அறிக்கை 2024-25 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது, பா. ஜ. க. அரசின் அரசியல் இலாபத்துக்காக ஆட்சியை தக்க வைக்க வேண்டும் என்ற காரணத்துக்காக தாக்கலாகி உள்ளது.

மத்திய நிதியமைச்சர் இதுவரை தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கைகளில் பெயரளவிலாவது தமிழும், தமிழகமும் இடம் பெறும். அதனைக்கூட தற்போதைய நிதிநிலை அறிக்கையில் தவிர்த்து இருக்கிறார் நிதியமைச்சர்.

மேற்கோள் காட்டுவதற்காக வழக்கமாக பயன்படுத்தப்படும் திருக்குறள் உட்பட அனைத்தையும் தவிர்த்து இருக்கிறார் நிதியமைச்சர். இயற்கை சீற்றங்கள், தமிழகத்திற்கான நிலுவை நிதி, இரண்டாம் கட்ட மெட்ரோ ரயிலுக்கான நிதி உட்பட தமிழகத்திற்காக எதுவும் குறிப்பிடாமல் தவிர்க்கப்பட்டிருக்கிறது. இதுபோல், தமிழகத்துக்கு எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏமாற்றம் அளிக்கப்பட்டிருக்கிறது. இது தமிழகத்தின் மீதான மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது - என்றார். (ஐ)

# மத்திய அரசுக்கு எதிராக தி. மு. க. கண்டன தீர்மானம்!

கோவை, ஜூலை 25

மத்திய வரவு - செலவுத் திட்டத்தில் தமிழகம் புறக்கணிக்கப்பட்டதை கண்டிக்கும் விதமாக கோவை மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற தி. மு. க. முடிவெடுத்துள்ளது.

நேற்று நடந்த கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மத்திய அரசின் வரவு - செலவு திட்டத்தில் கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்கள் குறித்த அறிவிப்புகள் இல்லை. தமிழ்நாட்டின் நலன் புறக்கணிக்கப்பட்டுள்ளது. எனவே, மத்திய அரசின் வரவு - செலவு திட்டத்தில் தமிழகம் புறக்கணிக்கப்பட்டதை கண்டித்தும் மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படும் - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வன்னியர்களுக்கு சமூகநீதி உடன் வழங்கப்படவேண்டும்

## பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்து

சென்னை, ஜூலை 25

வன்னியர்களுக்கான இடஒதுக்கீடு குறித்த பரிந்துரையை பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திடமிருந்து விரைவாக பெற்று, சட்டமியற்றி வன்னியர்களுக்கான சமூகநீதியை வழங்குவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பா. ம. க. நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

“தமிழ்நாட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 20வீத இட ஒதுக்கீட்டிலிருந்து வன்னியர்களுக்கு 10.5 வீத உள் இடஒதுக்கீடு வழங்குவது பற்றி பரிந்துரைக்க பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்துக்கு வழங்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்து விட்ட நிலையில், இதுவரை காலக்கெடு நீட்டிக்கப்படவில்லை. இன்னொருபுறம், வன்னியர் இட ஒதுக்கீடு குறித்து பரிந்துரைக்க மேலும் ஒராண்டு காலம் தேவை என்று பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் கோரியிருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது.

வன்னியர் இடஒதுக்கீட்டு கோரிக்கையின் தீவிரம் புரியாமல், உதைபந்தாட்டம் போன்று அக்கோரிக்கையை அரசும், ஆணையமும் உதைத்து ஆடுவது கண்டிக்கத்தக்கது. இட ஒதுக்கீடு குறித்த பரிந்துரையை பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திடமிருந்து விரைவாக பெற்று, சட்டமியற்றி வன்னியர்களுக்கான சமூகநீதியை வழங்குவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று கூறியுள்ளார். (ஐ)

# வணிகர்கள் தமது கடைகளுக்கு தமிழில் பெயர்வைக்கவேண்டும்!

## முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை

சென்னை, ஜூலை 25

வணிகத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதுதான் தமிழக அரசின் கொள்கை என்றும், வணிகர்கள் கடைகளுக்கு தமிழில் பெயர் வைப்பதை தாமாக முன்வந்து செய்ய வேண்டும் என்றும் வணிகர்கள் நலன் கூட்டத்தில் முதல்வர் மு. க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

அனைத்து கடைகளிலும் தமிழில் பெயர் பலகை வைப்பதை நீங்களே முன்வந்து செய்ய வேண்டும். தமிழ்நாட்டின் வீதிகளில் தமிழை காணமுடியவில்லை என்று யாரும் சொல்லக்கூடாது. அந்த அளவுக்கு பெயர் பலகைகளில் தமிழில் மாற்ற முன் வரவேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்பம், அழகியல் பாடங்களை நீக்குவது படுமுட்டாள்தனமான செயல்!

## சபையில் சஜித் பிரேமதாச சாடல்

கொழும்பு, ஜூலை 25

**முன்மொழியப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்தத்தின்படி தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், அழகியல் பாடங்களை நீக்குவது முட்டாள்தனமான செயல் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை விசேட கூற்றொன்றை முன் வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

2006 ஆம் ஆண்டில், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்ற பாடம், முன்மொழியப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்தத்தில் பரீட்சை திணைக்களத்தால் மதிப்பிடப்பட்ட 7 முக்கிய பாடங்களுக்குள் உள்ளடக்கப்படவில்லை. இலங்கையை டிஜிற்றல் இலங்கையாக உருவாக்கும் நோக்கில் செயற்படும் இவ்வேளையில், இவ்வாறான முட்டாள்தனமான முடிவுகளை எடுக்கக் கூடாது.

முன்மொழியப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்தத்தின்படி, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்ற பாடத்தை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான பாடங்களில் ஒன்றாக அதனை உள்ளடக்குவதில்லை என தீர்மானித்துள்ளனர்

ஆனால் மாறிவரும் தொழில் நுட்ப யுகம் உருவாகியுள்ள இவ்வேளையில், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் என்ற பாடம் உள்ளடக்கப்பட வேண்டும். அவ்வாறே அழகியல் பாடத்தையும் நீக்கியுள்ளனர். எனவே இந்தப் பாடங்களை நீக்குவது தொடர்பாக அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானம் முட்டாள்தனமான செயல். எனவே இது குறித்து மீள் பரிசீலனை செய்ய வேண்டும் -என்றார். (அ)

# முட்டை உற்பத்தியாளர்களுக்கு அமைச்சர் நளின் எச்சரிக்கை!

கொழும்பு, ஜூலை 25

"முட்டை ஒன்றின் சில்லறை விலையை 40 ரூபாயாகக் குறைக்க முடியும்" என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.



முட்டை விலை தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

முட்டையின் விலையானது 6 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நுகர்வோர் அதிகாரசபையின் அறிக்கைகளையும் பெற்று வருகின்றேன். தொடர்ந்து சோதனை செய்து வருகிறோம். 40 ரூபாய்க்கு கூட முட்டையினை விற்பனை செய்ய முடியாவிட்டால் இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

ஏனெனில் பண்டிகை காலம் டிசம்பரில் தொடங்கும். கேக் தயாரிப்பாளர்கள் நிறைய முட்டைகளை எடுத்துக்கொள்கிறார்கள். இவர்களுக்கு தேவையான முட்டைகள் இல்லை என்றால், முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டும்.

எனவே பண்டிகைக் காலத்தில் முட்டை விலையைக் குறைக்க முட்டை உற்பத்தியாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறு முட்டை உற்பத்தியாளர்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால், மீண்டும் இந்தியாவில் இருந்து முட்டையை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

# கலாசாலையில் ஆடிப்பிறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 25

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கவின்கலை மன்றம் முன்னெடுத்த ஆடிப்பிறப்பு விழா நேற்றுக் காலை கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஷ் அவர்களும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச கலாசார உத்தியோகத்தர் பா.ஜெயதாசும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வுகளை ஆரம்பக் கல்விநெறி ஆசிரிய மாணவி திருமதி மைதிலி கோகுலக்கண்ணன் நெறிப்படுத்தினார். வரவேற்புரையினை விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவி கிட்டா தவராசாவும் பிரதி அதிபர் க. செந்தில்குமரன் வாழ்த்துரையையும் விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவன் இ.செந்தூர் செல்வன் ஆசிரிய மாணவர் உரையையும் விரிவுரையாளர் வேல் நந்தகுமார் ஆடிப்பிறப்புப் பற்றிய சிறப்புரையையும் ஆற்றினர். கவின்கலைமன்றக் காப்பாளர் ரஜிதா சின்னதுரை பிரதம விருந்தினரை அறிமுகம் செய்து வைத்ததோடு தொடக்கவுரையையும் ஆற்றினார். நன்றியுரையினை கிறிஸ்தவ கல்வி நெறி ஆசிரிய மாணவி கமலினி சுதாகர் ஆற்றினார். நிகழ்வின் நிறைவில் கலாசாலை சமூகத்தினர் அனைவருக்கும் ஆடிக்கூழ் பரிமாறப்பட்டது. (அ)





# அரசியலமைப்பு பேரவை தீர்மானத்தை சபாநாயகர் திரிபுபடுத்தி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 25

வழக்கு விசாரணை நடவடிக்கைகள் நிறைவுபெறும் வரை தற்போதைய பொலிஸ் மா அதிபர் அந்தப் பதவியில் கடமையாற்றுவதை இடைநிறுத்துவதாக உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.



பிரதமரும் அங்கம் வகிக்கின்ற அரசியலமைப்பு பேரவையின் செயற்பாடுகளை திரிபுபடுத்தி சபாநாயகர் கடிதமொன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார். அரசியலமைப்பு பேரவையின் கூட்டத்தின் பின்னர், அதன் முடிவை பாராளுமன்றத்திற்கு அறிவிக்காமல் ஜனாதிபதிக்கு இவ்வாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த கடிதம் அரசியலமைப்பை தெளிவாக மீறியுள்ளது. பிழையான, பொய்யான, வஞ்சிக்கும் இந்த கடிதத்தின் அடிப்படையில் ஜனாதிபதி நியமனங்களை வழங்கியதும் அரசியலமைப்புக்கு முரணானது என சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இது தொடர்பில் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

சபாநாயகரின் அடிப்படையற்ற இவ்வாறான கடிதங்களை மூலமாகக் கொண்டு ஜனாதிபதி இவ்வாறான நியமனங்களை மேற்கொள்வது பொருத்தமான நடவடிக்கையா? இது தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை என்ன? அரசாங்கம் இதற்கு பதிலளிக்க வேண்டும் என சஜித் பிரேமதாச தெரிவித்தார். (அ)

# அரசுக்கு சொந்தமான 1,600 நிறுவனங்களின் சொத்துக்கள் குறித்து முறைப்படி விசாரணை

## அமைச்சர் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 25

அரச சொத்துக்கள் முகாமைத்துவ சட்டத்தின் ஊடாக இலங்கையிலுள்ள அனைத்து அரச நிறுவனங்களின் சொத்துக்களையும் விசாரணை செய்து முறையான முகாமைத்துவத்தின் கீழ் கொண்டு வருவதற்கு தயார் என நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

1600க்கும் மேற்பட்ட அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்கள் உள்ளதாகவும், அவற்றின் சொத்துக்கள் சரியான முறையில் நிர்வகிக்கப்படவில்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அந்த நிறுவனங்களில் சுமார் 91,000 வாகனங்கள் இருப்பதாகவும் நிலையான சொத்துக்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தி அவற்றை முறையாக முகாமைத்துவம் செய்து மக்களுக்கு பயனுள்ள சேவையை வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கௌரவ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நிதிய மைச்சர் என்ற வகையில் முன்வைக்கப்பட்ட இது தொடர்பான சட்டமூலத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை, பாராளுமன்றத்தில் முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட பொருளாதார மாற்றத்துக்கான சட்டமூலம் மீதான



விவாதம் இன்று விவாதிக்கப்படவுள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். பொருளாதார சீர்திருத்தம் தொடர்பான சட்டகட்டமைப்புகள் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்படும் எனவும், ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரம் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு சாதகமான சூழல் அமையும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும்

## அரசின் நிலைப்பாடு இது என்கிறார் பிரசன்ன

கொழும்பு, ஜூலை 25

**பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் இன்னமும் இருப்பதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**



இந்த விடயத்தில் அரசாங்கம் தொடர்ந்தும் தலையிட்டு வருவதாக அமைச்சர் வலியுறுத்தினார்.

நேற்று பாராளுமன்றத்தில் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

" பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மை. அதனால்தான் அரசு தலையிட்டு இந்த விடயத்தில் தொடர்ந்து வேலை செய்கிறது. முதலாளி நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளதாலும், வழக்கு நிலுவையில் உள்ளதாலும் இது தொடர்பாக என்னால் அறிக்கை அளிக்க முடியாது. அரசின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. நாமும் அதே நிலையில்தான் இருக்கிறோம்." - எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ)

---

ஜனாஸா எரிப்பு;

# "மன்னிப்பு கொடுப்பதைவிட தண்டனையே மிகஅவசியம்"

கொழும்பு, ஜூலை 25

ஜனாஸா எரிப்பு தொடர்பாக மன்னிப்புக் கொடுப்பதை விடுத்து அதற்குக் காரணமானவர்களுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர எம்.எல்.எம்.அதாவுல்லா வலியுறுத்தியுள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொர்டர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றத்தின் அதிகாரத்தை மீறி ஜனாஸாக்களை எரிக்க வர்த்தமானி ஒன்றை அப்போதைய அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி வெளியிட்டிருந்தார்.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் ஜனாஸாக்களை எரித்தமை குறித்து மன்னிப்பு கோரியமை நல்ல விடயம். ஆனால் பாராளுமன்றத்தின் அதிகாரத்தையும் மீறி ஜனாஸா எரிக்க வர்த்தமானி வெளியிடப்பட்டமையால் பாராளுமன்றத்தின் சிறப்புரிமை மீறப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக நான் பல தடவை இந்தச் சபையில் கேள்வியெழுப்பியுள்ளேன். எனவே மன்னிப்புக் கேட்பதை விட அதற்கான தண்டனையை யாருக்கு வழங்குவது என்பதை இந்த பாராளுமன்றம் தீர்மானிக்க வேண்டும்-என்றார். (அ)

---

# 1,700 ரூபா சம்பளம் குறித்து அரசின் நிலைப்பாடு என்ன?

## சபையில் வேலுகுமார் எம்.பி. கேள்வி

கொழும்பு, ஜூலை 25

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு விடயத்தில் அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாடு என்ன என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான வேலுகுமார்.

பாராளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு-

மே முதலாம் திகதி பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. கொட்டகலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட ஜனாதிபதி, சம்பளத்தை 1700 ரூபாவினால் அதிகரிப்பதாக உறுதியளித்தார்.

அந்த வர்த்தமானி மே 21 அன்று மீண்டும் திருத்தப்பட்டு மற்றுமொரு வர்த்தமானி வெளியிடப்பட்டது. ஜூன் 10 ஆம் திகதி அனைத்து வர்த்தமானிகளும் ரத்து செய்யப்பட்டு மற்றொரு வர்த்தமானி வெளியிடப்பட்டது.

தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்து அரசின் நிலைப்பாடு என்ன என்று கேட்க விரும்புகிறேன். கடந்த வாரம் ஈரானுக்கு தேயிலையை ஏற்றுமதி செய்வதன் மூலம் எமது நாட்டின் டொலர் கடனில் 60 வீதத்தை செலுத்த முடிந்துள்ளது.

எமது நாட்டுக்கு டொலர்களை கொண்டு வரும் மக்களின் வாழ்க்கை நிலைமை இன்று கீழ் மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. வர்த்தமானியை ரத்து செய்ததன் பின்னர் அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மை என்ன? - என்றார். (அ)

---

# ஓய்வூதியம் அதிகரிப்பு தொடர்பில் அரசு முரண்பாடான தீர்மானங்கள்

## சாடுகின்றார் சஜித் பிரேமதாச

கொழும்பு, ஜூலை 25

2016 - 2020 காலப்பகுதியில் ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள அதிகரிப்பு தொடர்பான ஓய்வூதிய திருத்தம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் பதவிக்கு வந்ததன் பின்னர் நீக்கப்பட்டது. இதில் ஒரு இலட்சத்து பத்தாயிரத்திலிருந்து ஒரு இலட்சத்து இருபதாயிரம் வரையிலான ஓய்வூதியம் பெறுவோர் பாதிப்பை சந்தித்து வருகின்றனர். இவர்களில் சுமார் 15,000 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள அதிகரிப்பின் ஓய்வூதிய திருத்தம் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என அரசாங்கம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளது. ஆனால், பாதிக்கப்பட்ட 241 ஓய்வூதியம் பெறுநர்கள் இணைந்து தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சம்பளப் பாக்கியோடு 2025-2026 ஆம் ஆண்டில் ஓய்வு பெறுவோருக்கு இந்த சம்பள அதிகரிப்பை மேற்கொள்வதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்க வேண்டிய சம்பள அதிகரிப்பு தொடர்பான ஓய்வூதிய திருத்தம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் வழங்கிய பதிலையே அரசாங்கம் பாராளுமன்றத்திலும் தெரிவிக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் உயர் நீதிமன்றத்தில் ஒரு பதிலையும் பாராளுமன்றத்தில் மற்றொரு பதிலையும் வழங்கியுள்ளது. இதனால், பாராளுமன்றமும், நாடும், ஓய்வுபெற்ற சமூகம் தவறாக வழிநடத்தப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள அதிகரிப்பு தொடர்பான ஓய்வூதிய திருத்தம் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் எவ்வித உறுதியான தீர்மானத்தையும் எடுக்காது இருக்கிறது. ஆனால் ஓய்வூதியம் பெறுவோருக்கு இழைக்கப்பட்ட பாரிய அநீதியை தான் திருத்தியமைத்துத் தருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூறினார். (அ)

---

# இடைக்கால கொடுப்பனவாக 5,000 ரூபா வழங்கவேண்டும்!

## இராதாகிருஷ்ணன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜூலை 25

"பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பான நீதிமன்ற வழக்கில் தீர்வு கிடைக்கும் வரை இடைக்கால கொடுப்பனவாக 5,000 ரூபாவை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு காரணமாக எமது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெருந்தோட்ட கம்பனிகள், நீதிமன்ற தடை உத்தரவைக் காரணம் காட்டி சம்பள உயர்வை வழங்க மறுத்து வருகின்றன. இதன் காரணமாக தொழிலாளர்கள் பெரும் பொருளாதார ரீதியான பாதிப்பை சந்தித்து வருகின்றனர்.

எனவே அவர்களுடைய விடயத்தில் அரசாங்கம் மனிதாபிமான ரீதியாகச் சிந்தித்து செயற்பட வேண்டும்.

எங்களுடைய தொழிலாளர்களின் வருமானத்தின் மூலமாக ஈரான் நாட்டினுடைய ஒரு தொகுதி கடனை அரசாங்கம் செலுத்தியுள்ளது.

ஆனால் அரசாங்கம் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயத்தில் கண்ணாம் பூச்சி ஆட்டம் ஆடி வருகின்றது.

வர்த்தமாணி அறிவித்தல் ஜனாதிபதியின் பரிந்துரை என பல விளையாட்டுகள் நடைபெறுகின்றன.ஆனால் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை.

நீதிமன்றம் இடைக்கால் தடை உத்தரவை வழங்கியுள்ளது. எனவே, அரசாங்கம் நீதிமன்றத்தின் வழக்கு தீர்ப்பு கிடைக்கின்ற வரையில் தொழிலாளர்களுக்கான இடைக்கால கொடுப்பனவாக 5,000 ரூபாவை வழங்க முன்வர வேண்டும். இதனை தேர்தல் காலத்தில் மாத்திரம் வழங்கிவிட்டு நிறுத்திவிடாமல் வழக்கு நிறைவடைகின்ற வரையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

---

# 2019 முதல் இந்த வருடம் ஜூன் மாதம் வரை 474,142 பேருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு

கொழும்பு, ஜூலை 25

2019 ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த ஜூன் மாதம் வரை 4,74, 142 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு சென்றுள்ளனர். அவர்களில் 3 இலட்சத்து 1198 பேர் வீட்டுப் பணிப்பெண்களாக தொழில் புரிகின்றனர் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2019 ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த ஜூன் மாதம் வரை 4,74, 142 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு சென்றுள்ளனர். அவர்களில் 3 இலட்சத்து 1198 பேர் வீட்டுப் பணிப்பெண்களாக தொழில் புரிகின்றனர். அத்துடன் 3 லட்சத்து 62 ஆயிரத்து 943 பேர் பயிற்சி பெற்றவர்களாகவும் ஒரு இலட்சத்து 1199 பேர் பேர் பயிற்சி பெறாத நிலையிலும் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர்.

அவர்களின் நலன்புரி செயற்பாடுகள் தொடர்பில் அனைத்து நடவடிக்கைகளையும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் மேற்கொண்டு வருகிறது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு சென்றுள்ளவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் முறையாக முன்னெடுக்கப்படுகின்றன. காப்புறுதி மூலமான பாதுகாப்பும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் அந்த நாடுகளில் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்கு தீர்வு காணும் வகையில் அந்த நாடுகளில் தொழில் பிணக்குகளை தீர்ப்பதற்கான அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று அவர்களுக்கான பாதுகாப்பு இல்லங்களும் அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதற்கு நாங்கள் அவ்வாறான சிக்கல்களுக்கு அகப்படுவோர் தொகை மிக மிக குறைவாகவே காணப்படுகிறது-என்றார். (அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகனமா அடக்கமா என்ற விவகாரத்தில் மன்னிப்புக் கேட்டு தப்பி ஓடவேண்டாம்!

## பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என்கிறார் சஜித்

கொழும்பு, ஜூலை 25

**கோவிட் தொற்றுநோய் நிலவியய காலப்பகுதியில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட கட்டாய தகன கொள்கைக்கு மன்னிப்பு கேட்பதென்பது ஒரு சிறந்த விடயம். இந்த தீர் மானத்திற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் ஆதரவளித்தனர். இதன் மூலம் முஸ்லிம் மக்களின் சமய, கலாசார உரிமைகள் முற்றாக மீறப்பட்டன. நாட்டில் இனவாதமும் மதவாதமும் முன்னெடுக்கப்பட்டன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**



முஸ்லிம்களை இலக்கு வைத்து அடக்கமா தகனமா என்ற விவகாரம் தொடர்பில் கோட்டாபய ராஜபக்சவின் அமைச்சரவை தவறான தீர்மானத்தை எடுத்தது. இந்த தீர்மானம் எந்த நபரின் அறிக்கையின் அடிப்படையில் எடுக்கப்பட்டது? இது தொடர்பாக ஆலோசனை வழங்கியது யார்? இந்த ஆலோசனை தொடர்பாக அரசியல் தலைமைகள் பரிசீலித்து ஆராய்ந்து பார்க்காததன் காரணம் என்ன? போன்ற விடயங்கள் தொடர்பான காரணங்களை முன்வைக்க வேண்டும் என சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அதிகாரிகளின் கூற்றுப்படி, உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசனைகளை கைவிட்டு, முஸ்லிம் மக்களுக்கு எதிராக இவ்வாறான குற்றச் செயலைச் செய்ய தவறான தீர்மானங்களை எடுத்தவர்களைக் வெளிப்படுத்தி, தகனமா அடக்கமா விவகாரத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். முஸ்லிம் மக்களிடம் மன்னிப்புக் கேட்டு பிரச்னையில் இருந்து தப்பி ஓட முயற்சிக்க வேண்டாம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (அ)

# ஏற்றுமதி வருவாய் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை 25

இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தற்காலிகத் தரவுகளுக்கு அமைய, கடந்த ஜூன் மாதம் ஏற்றுமதி வருவாய் ஆயிரத்து 31.2 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

இது 2023ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2.58 சதவீத அதிகரிப்பாகும் எனவும், ஆடை, தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை சார்ந்த ஏற்றுமதிகளின் காரணமாக இந்த அதிகரிப்பு பதிவாகியுள்ளது எனவும் சுங்கத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை 2024ஆம் ஆண்டின் மே மாதத்துடன் ஒப்பிடுகையில் கடந்த ஜூன் மாதம், ஏற்றுமதி 1.97 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் தரவுகள் தெரிவிக்கின்றன.

(அ)

# களுத்துறை மாவட்ட செயலகத்தில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டுக்குள் வந்தது

கொழும்பு, ஜூலை 25

களுத்துறை மாவட்ட செயலகத்தில் ஏற்பட்ட தீப்பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்ட செயலக ஆறு மாடிக் கட்டடத்தின் தரைத் தளத்தில் உள்ள மின் அமைப்பில் நேறறு காலைத் தீப்பரவல் ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து, களுத்துறை மாநகரசபையின் இரண்டு தீயணைப்பு வாகனங்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகக் களுத்துறை தெற்கு பொலிஸாரா தெரிவித்தனர்.

குறித்த கட்டடத்திலிருந்து அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதாக கூறப்பட்டது.

மின் கசிவுக் காரணமாக இந்தத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளவுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, தீயைக் கட்டுப்படுத்தச் சென்ற தீயணைப்பு வீரர் ஒருவர் மூச்சுத் திணறல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# வவுனியா திருஞானசம்பந்தர் வித்தியாலய அதிபரை மாற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டம்!

வவுனியா, ஜூலை 25

வவுனியா ஸ்ரீ இராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலத்தின் அதிபரை மாற்றுமாறு கோரி பெற்றோர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று புதன்கிழமை பாடசாலையின் காலை பிரார்த்தனை முடிவடைந்த பின்னர் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்த போது-

எமது பாடசாலை கல்விநிலையில் வீழ்ச்சி நிலையினை கண்டுள்ளது. பாடசாலையில் நடைபெறும் வேலைத்திட்டங்கள் தொடர்பான கணக்கறிக்கைகள் எவையும் சமர்பிக்கப்படவில்லை. அங்கு நடைபெறும் சம்பவங்கள் தொடர்பாக பெற்றோர்களிற்கு அறிவித்து கலந்துரையாடும் நடவடிக்கையினையும் அவர் முன்னெடுப்பதில்லை.

இவ்வாறானா காரணங்களால் பாடசாலையில் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டு போகும் நிலை ஏற்ப்பட்டுள்ளது. இந்தநிலைமை தொடர்ந்தால் பாடசாலையினை இழுத்து மூடவேண்டிய நிலைமையே ஏற்படும். எனவே உடனடியாக அவரை மாற்றித்தருமாறு உரிய அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கின்றோம்-என்றனர்.

குறித்த விடயம் தொடர்பாக பாடசாலையின் அதிபரை தொடர்புகொண்டு கேட்ட போது,

நான் பொறுப்பேற்ற பின்னர் பாடசாலையில் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செய்துள்ளோம்.

குறிப்பாக வெளிநபர்களின் உதவிகளை பெற்று மாணவர்களது கல்விவளர்ச்சிக்கு உரிய தேவைகளை செய்துள்ளோம், வறுமைப்பட்ட மாணவர்களின் தேவைகருதி சத்துணவு திட்டத்தினை விஸ்தரித்துள்ளோம். அனைத்திற்கும் கணக்கறிக்கை சமர்பிக்கப்பட்டு அது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

பாடசாலையின் நிர்வாகத்தை ஒரு சிலநபர்கள் சொல்வது போல நடாத்தமுடியாது. சில பெற்றோர்கள் தமது பிள்ளைகள் விடயத்தில் சரியாக செயல்பட்டால் நாம் பாடசாலையில் மாணவர்களுடன் முரண்படவேண்டிய தேவை ஏற்படாது-என்றார். (அ)

# அரசாங்கத்தின் கச்சேரி போன்று செயல்படுகின்றது பாராளுமன்றம்!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 25

பாராளுமன்றம் நிலையியல் கட்டளைக்கும், அரசியலமைப்புக்கும் அமைய செயற்படுவதில்லை என்பதை பொலிஸ்மா அதிபருக்கு இடைக்காலத் தடைவிதித்து உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. பாராளுமன்றம் வெட்கப்படவேண்டும். எங்கும் அரசியல் பாராளுமன்றம் அரசாங்கத்தின் கச்சேரி போல் மாறிவிட்டது. தவறுகளை திருத்திக் கொள்ளாவிடின் பாராளுமன்றத்தின் ஜனநாயகம் இல்லாதொழிக்கப்படும் என எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் வலியுறுத்தினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த பொலிஸ்மா அதிபரின் பெயர் அரசியலமைப்பு பேரவைக்கு பரிந்துரைக்கப்பட்ட போது நான் அதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தினேன். அரசியலமைப்பு பேரவையில் இடம்பெற்ற வாக்கெடுப்பின் போது இவர் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படவில்லை.

பேரவை கூட்டம் நிறைவுப் பெற்றதன் பின்னர் சபாநாயகர் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பினார். அந்த கடிதத்தை பயன்படுத்தி பொலிஸ்மா அதிபராக இந்த நபரை ஜனாதிபதி நியமித்தார். பாராளுமன்றம் வெட்கப்பட வேண்டும். பாராளுமன்றம் எவ்வாறு செயற்படுகிறது என்பதை உயர்நீதிமன்றம் தீர்ப்பின் ஊடாக சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்விதமான பொறுப்பும் இல்லாமல் அரசியல் நோக்கத்துடன் செயற்பட்டுள்ளதை நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. பாராளுமன்றம் மலினப்படுத்தப்பட்டுள்ளது. பாராளுமன்றம் நிலையியல் கட்டளைக்கு அமைய செயற்படுவது இல்லை என்பதை பொலிஸ்மா அதிபருக்கு தடையுத்தரவு பிறப்பித்து சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்தின் கச்சேரி போன்று பாராளுமன்றம் மாறிவிட்டது. அனைத்து இடங்களிலும் அரசியல். பாராளுமன்றம் முறையற்ற வகையில் செயற்படுகிறது. இதனை திருத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிடின் பாராளுமன்ற ஜனநாயகம் இல்லாதொழியும். பொலிஸ்மா அதிபரின் நியமனம் சட்டவிரோதமானது என்பதை நாங்கள் குறிப்பிட்டோம் எமது கருத்தை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது-என்றார்.

(அ)

# ரூ. 22 லட்சம் பெறுமதியான போதைப்பொருள் தண்ணீர்த் தொட்டியில் இருந்து கண்டுபிடிப்பு!

கொழும்பு, ஜூலை 25

மினுவாங்கொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கட்டுவெல்லேகம பகுதியில் உள்ள கைவிடப்பட்ட ஹோட்டல் ஒன்றின் தண்ணீர் தொட்டியிலிருந்து ஒரு கிலோ 70 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப்பொருளின் மொத்த மதிப்பு 22 இலட்சம் ரூபாவாகும்.

இந்த போதைப்பொருள் துபாயில் உள்ள பிரபல போதைப் பொருள் கடத்தல்காரர்களும் பாதாள உலக கும்பலைச் சேர்ந்தவர்களுமான கோரலகமகே மந்தினு பத்மசிறி பெரேரா என்பவருக்கு அல்லது கெஹெல்பத்தர பத்மே என்பவருக்குச் சொந்தமானதாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

(அ)

# யாழ். நீதிமன்றுக்கு போதையில் வந்த நபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு!

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாண நீதிமன்றிற்கு வழக்கு விசாரணைக்கு மதுபோதையில் வந்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ். நீதவான் நீதிமன்றில் நடைபெற்று வரும் குடும்ப வன்முறை தொடர்பான வழக்கு விசாரணையின் போது, நீதிமன்றுக்கு வந்த நபர் மதுபோதையில் இருந்தார்.

குறித்த நபர் மதுபோதையில் மன்றுக்கு விசாரணைக்கு வந்ததை அடுத்து, அந்நபரை கைது செய்த நீதிமன்ற பொலிஸார் மன்றில் அவரை முற்படுத்தினர்.

அதனை அடுத்து கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏறாவூர் ஆதார வைத்தியசாலை கிழக்கு ஆளுநரால் திறந்துவைப்பு



அம்பாறை, ஜுலை 25

**சீன நாட்டு அரசாங்கத்தின் நிதியுதவியுடன் ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்கென பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டு வரும் கட்டடத் தொகுதியின் முதற்கட்டம் முடிவுற்ற பகுதியினை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.**

பாராளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானாவின் வேண்டுகோளின் பேரில் இக்கட்டடத்தினை நிருமாணிப்பதற்கென கடந்த நல்லாட்சி காலத்தில் 450 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

நவீன வசதிகள் கொண்ட சத்திர சிகிச்சைக்கூடம், இரத்த வங்கி, அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் மருத்துவ விடுதி போன்ற வசதிகள் இக்கட்டடத்தில் உள்ளடக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகர் வருண சம்பத் பண்டார தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானா, மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் என். சிவலிங்கம், மாகாண பணிப்பாளர் டாக்டர் டிஜிஎம். கொஸ்தா, பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் ஆர். முரளீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)



# மர ஆலையில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டுக்குள்!

காரைதீவு, ஜுலை 25

அம்பாறை, காரைதீவு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட மாளிகைக்காடு பிரதேசத்திலுள்ள மர ஆலையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில், மரம் அறுக்கும் ஆலை தீப்பற்றியதுடன் மரங்களும் எரிந்து சாம்பலாகின.

கடந்த திங்கட்கிழமை மாலை இந்த மர ஆலையில் தீ பரவியதுடன், பிரதேசவாசிகள், கல்முனை மாநகர சபையின் தீயணைப்பு வாகனங்கள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்து மின்கசிவு காரணமாக ஏற்பட்டிருக்கலாம் எனவும், இதன் போது உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிய வருகின்றது. (எ)



# கல்முனை நூலக பத்திரிகை வாசிப்புப் பிரிவு இடமாற்றம்

கல்முனை, ஜுலை 25

கல்முனை பொது நூலக கட்டடத்தின் கீழ் தளத்தில் கடந்த சில வருடங்களாக தற்காலிகமாக இயங்கி வந்த கல்முனை மாநகர சபையின் அலுவலகப் பகுதி அங்கிருந்து இடமாற்றப்பட்டதைத் தொடர்ந்து, குறித்த கீழ் தளத்திற்கு நூலகத்தின் பத்திரிகை வாசிப்புப் பிரிவு இடமாற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸின் பணிப்புரைக்கு அமைவாக இதற்கான நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டிருந்தன.

கல்முனை பொது நூலக கட்டடத்தில் கல்முனை மாநகர சபை இயங்கி வந்ததால் பொது நூலகத்தில் இடப்பற்றாக்குறை நிலவுவதாகவும் இதனால் வாசகர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் குறிப்பாக மேல் தளத்தில் இயங்கும் பத்திரிகை வாசிப்புப் பிரிவை வயோதிபர்கள் பயன்படுத்துவதில் கடும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது.

இந்நிலையில், அண்மையில் கல்முனை மாநகர ஆணையாளராக கடமையேற்ற கையோடு இவ்விடயத்தில் கூடிய கரிசனை செலுத்திய ஆணையாளர் என். எம். நௌபீஸ், வாசகர்களின் நலன் கருதி மாநகர சபையின் அலுவலகப் பகுதியை துரிதமாக இடமாற்றி விட்டு, அவ்விடத்தை நூலகத்திற்கு கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

இதன் பயனாக கடந்த வாரம் மாநகர சபையின் அலுவலகப் பகுதி நூலக கட்டடத்தில் இருந்து இடமாற்றப்பட்டிருந்தது.

இதையடுத்தே கல்முனை பொது நூலகத்தின் வாசிப்புப் பிரிவு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை முதல் நூலக கட்டடத்தின் கீழ் தளத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. (அ)

# சம்மாந்துறை அல் ஸலாம் சிறுவர் இல்லத்தை மேம்படுத்தி நவீன முறையில் அமைக்க ஹரீஸ் எம்.பி. நிதி ஒதுக்கீடு!



அம்பாறை, ஜுலை 25

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒரே ஒரு சிறுவர் இல்லமான சம்மாந்துறை அல் ஸலாம் சிறுவர் இல்லத்தை மேம்படுத்தி நவீன முறையில் அமைக்க முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம். முகம்மட் ஹரீஸ் மூலம் ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டில் நான்கு மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை அல் ஸலாம் சிறுவர் இல்ல நிர்வாகிகளின் அழைப்பின் பேரில் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம். முகம்மட் ஹரீஸ் நேரடியாக அந்த சிறுவர் இல்லத்திற்கு விஜயம் செய்து அங்கிருக்கும் சிறுவர்களிடம் கலந்துரையாடியதுடன் நிர்வாகிகளிடமும் கலந்துரையாடினார். இதன்போது தனது நிதி ஒதுக்கீட்டுக்கான ஆவணத்தை நிர்வாகத்திடம் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் கையளித்தார்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை சிறுவர் நிலைய பொறுப்பதிகாரி எம்.சி.எம். சிப்கான், பாராளுமன்ற உறுப்பினரின் வெகுஜன மக்கள் தொடர்பாடல் செயலாளர் நூருல் ஹுதா உமர் உட்பட சம்மாந்துறை அல் ஸலாம் சிறுவர் இல்ல முகாமைத்துவ குழுவினர், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# துப்பாக்கி மீட்பு

கல்முனை. ஜுலை 25

கடற்கரையில் பிளாஸ்டிக் குழாய் ஒன்றில் கிறீஸ் திரவம் இட்டு புதைத்து வைக்கப்பட்டிருந்த ரிவோல்வர் ரக துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டு கல்முனை தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாமாங்க பிள்ளையார் ஆலயத்தை அண்டிய கடற்கரை பகுதியில் கடலரிப்பினால் வெளியாகியுள்ள நிலையில் அங்கு விளையாட்டில் ஈடுபட்டவர்களால் குறித்த துப்பாக்கி மீட்கப்பட்டு செவ்வாய்க்கிழமை மாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த துப்பாக்கி 2 தோட்டாக்களுடன் இயங்குநிலையில் காணப்படுவதுடன் ஜேர்மனி நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும் மீட்கப்பட்ட துப்பாக்கி தொடர்பில் எந்தவொரு சந்தேக நபர்களும் கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகளை கல்முனை தலைமையக பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் போதைப்பொருள் ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு





திருமலை, ஜுலை 25


திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் இடம்பெற்ற போதைபொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கிழக்கு மாகாண மட்ட மேசைப்பந்தாட்ட போட்டியின் ஆரம்ப நிகழ்வினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமாரும் பிரதம அதிதிகளாக கலந்து கொண் டனர் .

இரு நிகழ்வுகளுக்கும் வருகை தந்திருந்த பிரதம அதிதிகளை கல்லூரி அதிபர் அருட்சகோதரி நிரோஷா வரவேற்றார்.

இரு நிகழ்வுகளும் கல்லூரியின் இரு நுழைவாயில்களினூடாக வெவ்வேறாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதியோப்பியாவில் நிலச்சரிவு; 229 பொதுமக்கள் உயிரிழப்பு!



அடிஸ் அபாபா, ஜூலை 25

**எதியோப்பியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சுமார் 229 பேர் உயிரிழந்தனர். கடந்த திங்கட்கிழமை பெய்த கன மழை பெய்தது. இதையடுத்தே நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.**


அந்த நாட்டின் தெற்கு பகுதியில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இதுவரை 148 ஆண்கள், 81 பெண்கள் உயிரிழந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நிலச்சரிவில் இருந்து ஐந்து பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

முதலில் இடம்பெற்ற நிலச்ச ரிவில் சிக்கியவர்களை மீட்கச் சென்றவர்கள் இரண்டாவது நிலச்சரிவில் சிக்கினர். இதனால், உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

இதேநேரம், 500 குடும்பங்களுக்கு செஞ்சிலுவை சங்கம் உதவிகளை வழங்கியுள்ளது.

ஆபிரிக்க கண்டத்தை சேர்ந்த நாடான எதியோப்பியா அதிக மக்கள் தொகை கொண்ட இரண்டாவது நாடாகும். 12 கோடிக்கும் அதிகமான மக்கள் அங்கு வசிக்கின்றனர். இந்த நாடு வெள்ளம் மற்றும் வறட்சி என காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்பட்டு வருகிறது. கடந்த மே மாதம் இந்த பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சுமார் 50 பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# நேபாளம் விமான விபத்தில் 18 பேர் கருகி பலியாகினர்!

காத்மாண்டு, ஜூலை 25


நேபாளத்தில் இடம்பெற்ற விமான விபத்தில் 18 பேர் கருகி உயிரிழந்தனர்.

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டு விமான நிலயத்தில் 19 பேருடன் விமானம் புறப்பட்டது. அது புறப்பட்ட சில விநாடிகளிலேயே ஓடுபாதையில் விழுந்து நொறுங்கியது. அப்போது, விமானம் தீப்பற்றி எரிந்தது.

இதில், அதில் பயணித்த 18 பேர் கருகிப் பலியாகினர். விமானி காயங்களுடன் மீட்கப்பட்டார்.

விபத்துக்குள்ளான விமானம் செளர்யா ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமானது. காத்மாண்டுவில் இருந்து போக்காராவுக்கு இந்த விமானம் நேற்றுக் காலை புறப்பட்ட போது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

(ஐ)




# கனடா இந்து ஆலயம்மீது வர்ணம் பூசி அவதூறு!

ஒட்டாவா, ஜூலை 25

கனடா, எட்மண்டன் நகரில் சுவாமி நாராயண் ஆலயத்தின் மீது அவதூறு ஏற்படுத்தும் நோக்கில் அடையாளம் தெரியாத நபர்கள் வர்ணங்களைப் பூசி சேதப்படுத்தியுள்ளனர்.

கோயில் மீது கறுப்பு மையால் சில எதிர்ப்பு வாசகங்கள் எழுதப் பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தையடுத்து அதிகரித்து வரும் பிரிவினை வாத போக்கை தடுக்கும் வகையில் இந்தச் செயலை செய்தவர் கள்மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கனடா அரசுக்கு விஸ்வ ஹிந்து பரிஷத் அரசு கோரியுள்ளதுடன் இந்த செயலுக்கு கண்டனமும் தெரிவித் துள்ளது.

(ஐ)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்

# போட்டியிட தேவையான ஆதரவு பெற்றார் கமலா!

வாஷிங்டன், ஜூலை 25

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சியின் வேட்பாளராக போட்டியிட தேவையான கட்சி பிரதிநிதிகளின் ஆதரவை உபஜனாதிபதியான கமலா ஹாரிஸ் பெற்றுள்ளார்.

கட்சியில் நடந்த முதல் வாக்கெடுப்பில் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவாகத் தேவையான 1,976 பிரதிநிதிகளின் ஆதரவை அவர் பெற்றுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளரான டொனால்ட் ட்ரம்ப்புக்கு எதிராக, ஜனாதிபதி ஜோ பைடனின் செல்வாக்கு சரிந்து வந்த நிலையில் கட்சி வட்டாரங்கள், உள்கட்சியில் எழுந்த எதிர்ப்பைத் தொடர்ந்து போட்டியிலிருந்து பைடன் விலகினார்.

இதனைத் தொடர்ந்து ஜனநாயக கட்சியின் வேட்பாளராக உபஜனாதிபதி கமலா ஹாரிஸ் அறிவிக்கப்பட வாய்ப்பு அதிகரித்தது. ஜனாதிபதி ஜோ பைடன் தனது ஆதரவை கமலா ஹாரிஸுக்கு தெரிவித்த 36 மணி நேரத்துக்குள் திங்கட்கிழமை இரவு (அமெரிக்க நேரப்படி) கமலா ஹாரிஸுக்கு ஆதரவு கூடியது.




இதனிடையே, கமலா ஹாரிஸ் தேர்தல் நிதி திரட்டும் பணியை தொடங்கிய 7 மணி நேரத்தில் அவருக்கு சுமார் 5 கோடி டொலர்கள் - நம் நாட்டு மதிப்பில் சுமார் ஆயிரத்து 450 கோடி ரூபாய் நன்கொடை குவிந்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரசார வரலாற்றில் இது ஒரு புதிய சாதனையாகும்.

(ஐ)

# பங்களாதேஷில் தொடர்ந்த வன்முறை முடிவுக்கு வந்தது

## 200 பேர் உயிரிழப்பு

டாக்கா, ஜூலை 25

பங்களாதேஷில் மாணவர்கள் நடத்திய போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது. இந்தப் போராட்டத்தால் கடந்த 16ஆம் திகதி முதல் நேற்றுவரை வரை சுமார் 200 பேர் உயிரிழந்தனர்.

அமைதியாக ஆரம்பித்த மாணவர்களின் போராட்டம் பின்னர் வன்முறையாக மாறியது. இதைத் தொடர்ந்து தீவைப்பு சம்பவங்கள் இடம்பெற்றன. வன்முறைகளால் தலைநகர் டாக்கா மற்றும் சிட்டங் ஹொங்கில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து பரவிய வன்முறையை கட்டுப்படுத்த



இராணுவம் குவிக்கப்பட்டது. அத்துடன், வன்முறையில் ஈடுபடுபவர்களை கண்டவுடன் சுடுவதற்கும் உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

இதற்கிடையே உச்சநீதிமன்றம் வன்முறைக்கு காரணமாக வேலைவாய்ப்பில் சு[illegible] போராட்ட தியாகிகள் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் 30 இடஒதுக்கீடு இரத்து செய்யப்படும் என அறிவித்தது. அதனைத் தொடர்ந்து மெல்ல மெல்ல இயல்பு நிலை திரும்பி வருகிறது.

(ஐ)

# ஜனாதிபதி பணிமனை வளாகத்தில் வீழ்ந்தது வடகொரிய குப்பை பலூன்



சியோல், ஜூலை 25

வடகொரியா ஏவிய குப்பை பலூன்கள் தென் கொரியாவின் ஜனாதிபதி பணிமனை வளாகத்தில் வீழ்ந்தன.

தென் கொரியா - வட கொரியா இடையே நீண்ட காலமாக மோதல் போக்கு இருந்து வருகிறது. இதனிடையே, சில நாட்களாக வடகொரியா, இராட்சத பலூன்களில் குப்பைகளை நிரப்பி தென் கொரியாவுக்குள் அனுப்பி வருகிறது. இதற்கு தென் கொரியா கடும் கண்டனம் தெரிவித்தது.

இந்த நிலையில் குப்பை பலூன்கள் தென் கொரியாவின் ஜனாதிபதி பணிமனை வளாகத்தில் விழுந்தன. வட கொரிய பலூன்கள் நேற்று காலை எல்லையைத் தாண்டி தலைநகர் சியோலுக்கு வடக்கே பறந்தன.

அந்த பலூன்கள் தென் கொரியாவின் ஜனாதிபதி பணிமனை வளாகத்தில் விழுந்தன என்று யோன்ஹாப் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப சுகாதார சேவையை பலப்படுத்த 150 மில்லியன் டொலர்கள் நிதி ஒதுக்கீடு

## அமைச்சர் ரமேஷ் பத்திரண தகவல்



**கொழும்பு, ஜூலை 25**
**நாட்டின் ஆரம்பச் சுகாதார சேவையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக 150 மில்லியன் டொலர் நிதி அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.**

அவர் மேலும்தெரிவிக்கையில்- நாட்டின் ஆரம்பச் சுகாதார சேவையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக 150 மில்லியன் டொலர் நிதி அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது. நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை சமர்ப்பித்துள்ள நிலையில் அமைச்சரவை அதற்கான அங்கீகாரத்தை வழங்கியிருந்தது.

அந்த வகையில் கிழக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் போது கிண்ணியா வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மேற்கொள்ளப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு இணங்க அடுத்த வருடத்தில் அது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

மத்திய அரசாங்கத்தின் கீழ் வரும் வைத்தியசாலைகள், மாகாண சபை மட்டத்திலான வைத்தியசாலைகள் என்ற எந்த வித பேதங்களும் இன்றி அரசாங்கம் போதிய நிதியை ஒதுக்கி அவற்றுக்கான தேவைகளைப் பெற்றுக் கொடுக்கும்.

மத்திய அரசாங்கம் மாகாண சபை அரசாங்கம் எனப் பிளவுபடுத்தி நாம் நோயாளர்களைப் பார்க்க முடியாது. அந்த வகையில் நோயாளர்களுக்கான சிகிச்சை நடவடிக்கைகளை முன்னரை விட சிறப்பாக முன்னெடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசாங்கம் முன்னெடுத்துள்ளது -என்றார். (அ)

# திடீரென உயிரிழந்த பாடசாலை மாணவி!

கொழும்பு, ஜூலை 25
காய்ச்சல் காரணமாக கேகாலை பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைப்பெற்று வந்த பாடசாலை மாணவியொருவர் உயிரிழந்துள்ளார்.

தெவலேகம பமுனுகம மலியதேவ மகா வித்தியாலயத்தில் 9ஆம் தரத்தில் கல்வி கற்கும் ஹஷினி மதுபாஷினி விக்கிரமாராச்சி என்ற 14 வயது பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அண்மையில் காய்ச்சல் காரணமாக கேகாலை பொது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு மருத்துவ சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கடந்த 10ஆம் திகதி வயிற்றின் இரு பக்கங்களிலும், கை, கால்களிலும் வலி ஏற்பட்டதால் கேகாலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்த 12ஆம் திகதி உடல்நிலை மோசமடைந்ததையடுத்து தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்ட நிலையில், அவர் நேற்று முன் தினம் மாலை உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பாடசாலை மாணவியின் பிரேத பரிசோதனையை கேகாலை பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி நிரஞ்சலா குலதுங்க மேற்கொண்டுள்ளார் மாணவியின் இதயம் மற்றும் சிறுநீரகங்களில் ஒரு வகை விசக் கிருமி நுழைந்துள்ளமையே மாணவியின் மரணத்திற்கு காரணம் எனவும் பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது. இவ்வாறு உயிரிழந்த பாடசாலை மாணவியின் இறுதிக் கிரியைகள் நேற்று இம்புல்கஸ் தெனியில் இடம்பெற்றன. (அ)

# கிளப் வசந்த கொலை; மேலும் இருவர் கைது!

கொழும்பு, ஜூலை 25
கிளப் வசந்த உட்பட இருவர் கொலை செய்யப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கு உதவிய சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகளினால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஜூலை 8ஆம் திகதி, அதுருகிரிய பொலிஸ் பிரிவில் உள்ள பச்சை குத்தும் நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டனர், மேலும் 4 பேர் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பிலான விசாரணையின் போது, நேற்று முன் தினம் மாலை அத்துருகிரிய மற்றும் பத்தரமுல்லை பிரதேசங்களில், குற்றச் செயலுக்கு உறுதுணையாக இருந்த இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு அத்துருகிரிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 26 மற்றும் 36 வயதுடைய வெலிபன்ன மற்றும் அஹுங்கல்ல பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதி தேர்தலில் ரணிலுக்கு மக்கள் ஆதரவு வழங்கத் தயார்!

## சாமர சம்பத் தசநாயக்க கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 25
வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட நாடு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கீழ் இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்திற்குள் மீட்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க எமது அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் நட்டமடையும் நிலையை தவிர்த்து இலாபம் ஈட்டும் நிலைக்கு வந்துள்ளன.

உலகில் கடுமையான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள ஏனைய நாடுகள் இவ்வளவு குறுகிய காலத்தில் பொருளாதார ஸ்திரத்தன்மையை எட்டவில்லை. இந்த ஸ்திரத் தன்மையை பேணுகின்ற அதே வேளை பொருளாதாரத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு அனைத்து தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

மேலும், அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் கடந்த காலத்தில் கொண்டு வரப்பட்ட வரித் திருத்தங்கள் குறித்தும் மக்கள் மத்தியில் சில எதிர்ப்புகள் எழுந்தன. ஆனால், அந்த முடிவுகளின் நன்மைகளை மக்கள் பெறும்போது, அந்த எதிர்ப்பு மறைந்துவிடும். உலகில் உள்ள ஏனைய நாடுகள் நம் நாட்டை விட அதிக சதவீத வரிகளை வசூலிக்கின்றன என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

கடந்த நெருக்கடியின் போது, மக்களிடம் பணம் இருந்தது. ஆனால் வாங்குவதற்கு பொருட்கள் பற்றாக்குறையாக இருந்தது. ஆனால் தற்போது அவ்வாறான நிலை இல்லை. எனினும், இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டின் நிலைமையை நாம் யாரும் மறந்துவிடவில்லை. எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு எமது ஆதரவை வழங்குவோம். மேலும் கட்சி நிறமின்றி ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க மக்களும் தீர்மானித்துள்ளனர்.-என்றார். (அ)

# மத்திய வங்கியின் வட்டி குறைப்பு!

கொழும்பு, ஜூலை 25
மத்திய வங்கியின் நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதம் ஆகியவற்றை முறையே 25 அடிப்படை புள்ளிகளால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் நடைபெற்ற இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதங்கள் முறையே 8.25 சதவீதம் மற்றும் 9.25 சதவீதமாக குறைக்க தீர்மானிக்கப் பட்டுள்ளது. (அ)

# சிறுமி துஷ்பிரயோகம் நடன ஆசிரியர் கைது!

கொழும்பு, ஜூலை 25
16 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் நடன ஆசிரியர் ஒருவர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக தலங்கமை பொலிஸார் தெரிவித்தனர்.

ரணால பகுதியில் வசிக்கும் தனியார் நடன வகுப்பொன்றை நடத்திச் செல்லும் நடன ஆசிரியரொருவரே கைது செய்யப் பட்டுள்ளார்.

சந்தேக நபர், கடந்த ஜனவரி மாதம் தனது தனியார் நடன வகுப்பில் கல்வி கற்கும் 16 வயது சிறுமியை நடன நிகழ்வொன்றுக்குத் தேவையான ஆடைகளைப் சரிபார்ப்பதற்கு அழைத்துச் செல்வதாகக் கூறி பெலவத்தை பிரதேசத்தில் உள்ள அரச நிறுவனமொன்றின் அறையொன்றுக்குள் அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர், கடந்த சில நாட்களுக்கு முன்னர் மற்றுமொரு பாலியல் துஷ்பிரயோக சம்பவம் தொடர்பில் ஹங்வெல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# ஆள் மாறாட்ட வழக்கு; சட்டத்தரணிக்கு பிணை

கொழும்பு, ஜூலை 25
ஆள்மாறாட்டம் தொடர்பான வழக்கில் யாழ்ப்பாணம் - உடுவில் பகுதியைச் சேர்ந்த சட்டத்தரணியொருவர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார். அத்துடன் சட்டத்தரணியின் அலுவலகத்தில் இருந்த மூன்று கணணிகளையும் பகுப்பாய்வு விசாரணைக்குட்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சட்டத்தரணி, கனிஷ்ட சட்டத்தரணிகள் மூலமாக ஆள்மாறாட்டம் செய்து, விவாகரத்து தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமை விசாரணையில் தெரியவந்தது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

புதிய பாராளுமன்றம் எந்த நாளில் கூடவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு உரியதே. எனவே, விரைவாக பாராளுமன்றத்தை கலைத்து, பொதுத் தேர்தலை நடத்தி, புதிய பாராளுமன்றம்கூடிய கையுடன் ஜனாதிபதித் தேர்தலை நடத்த அவர் திட்டமிட்டுள்ளார்.

இதனிடையே, நாட்டின் சட்டத்தின் படி, எதிர்வரும் நவம்பர் 18ஆம் திகதி புதிய ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டும். இதன்படி, ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் அதிகாரம் தற்போது தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உள்ளது. விரைவில், ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும் நிலைமை உள்ளது.

தேர்தல் சட்டவிதிகளின்படி தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு 28 முதல் 42 நாட்களுக்குள் தேர்தலை நடத்த முடியும். எனவே, நவம்பர் 18ஆம் திகதி புதிய ஜனாதிபதி பொறுப்பேற்கும் விதமாக - பாராளுமன்றத்தை கலைத்து - புதிய பாராளுமன்றம் அமைந்த கையுடன் ஜனாதிபதித் தேர்தலை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார் என்றும் கொழும்பு அரசியல் உயர்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ)

## வெலிக்கடை...

நடைபெற்ற தினமான இன்று வியாழக்கிழமை பிற்பகல் 03.05 மணிக்கு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் குரலற்றோரின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் நடைபெறவுள்ளது.

கறுப்பு ஜூலையின் ஓர் அங்கமாக வெலிக்கடை சிறை படுகொலை கடந்த 1983 ஜூலை 25, 28ஆம் திகதிகளில் நடைபெற்றது. சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளை அங்கிருந்த சிங்கள அரசியல் கைதிகள் சிறைக் காவலர்களின் ஆதரவுடன் வெட்டியும் குத்தியும் கொடூரமாகக் கொன்றனர். 25ஆம் திகதி 35 தமிழ் அரசியல் கைதிகளும் 28ஆம் திகதி 18 தமிழ் அரசியல் கைதிகளும் குரூரமாகக் கொல்லப்பட்டனர். இவ்வாறு கொல்லப்பட்ட 53 தமிழ் அரசியல் கைதிகளில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளான தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் ஆகியோரும் அடங்குவர் என்பது நினைவுகூரத்தக்கது. (ஐ)

## பொலிஸ்மா...

ஜனாதிபதிக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யசந்த கோதாகொட, அச்சல வெங்கப்புலி, மகிந்த சமயவர்த்தன ஆகிய மூன்று நீதியரசர்களை கொண்ட அமர்வு இந்த உத்தரவை பிறப்பித் துள்ளது.

அத்துடன், மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதி சார்பில் சட்டமா அதிபர், சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, தேசபந்து தென்னக்கோன் ஆகியோருக்கு எதிராக வழக்கு விசாரணை நடத்த நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அதுமட்டுமின்றி, இந்த மனு விசாரணை நிறைவடையும் வரை பிரதிவாதியான தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபர் பதவியில் தொடரவும் - தனது அதிகாரங்களை செயல்படுத்தவும், கடமைகளை செய்வதற்கும் நீதியரசர்கள் தடை விதித்துள்ளனர்.

மனுக்கள் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் - அவற்றை 6 வாரங்களுக்குள் தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதியரசர்கள் நவம்பர் 11ஆம் திகதி மீண்டும் மனுக்களை விசாரிக்கவும் உத்தரவிட்டனர்.

தேசபந்து தென்னக்கோனை பொலிஸ் மா அதிபராக நியமிப்பதற்கு ஜனாதிபதி எடுத்த தீர்மானத்தை இரத்து செய்யும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி கர்தினால் மல்கம் ரஞ்சித் உள்ளிட்டோர் சமர்ப்பித்த 9 அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு ஏற்று உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

## பரீட்சை...

இதற்கமைய, இந்த வருடத்துக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையை அடுத்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே திட்டமிட்டபடி, நிறைவடைந்துள்ள கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வெளியானால் அது சாத்தியமாகும்.

இதேநேரம், உயர்தரம் , ஏனைய பரீட்சைகளை அதற்கு முன்னர் நடத்து வதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## துப்பாக்கி...

பகுதியில் நடத்தப்பட்ட இந்தத் துப்பாக்கிச்சூட்டில் கல்விளான்குளம் சமக்கார அமைப்பின் செயலாளரான செல் லையா கிருஷ்ணராஜா (வயது 42) என்பவரே படு காயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த அவர் மல்லாவி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கல்விளான் பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வே இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## பெரமுனவின்...

விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என வெளிப்படையாக அறிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன மாறுபட்ட நிலைப்பாட்டை கொண்டுள்ள போதிலும், அமைச்சர் தனது கருத்தை வெளிப்படையாக அறிவித்துள்ளார். இந்த நிலையில், பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களான பெரும்பாலான அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் முழுமையாக ஜனாதிபதிக்கு பின்னால் உள்ளனர் என்று கூறப்படுகின்றது.

எனினும், ராஜபக்ஷ தரப்பினர் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் போதிலும் ஜனாதிபதிமீது தொடர்ந்தும் ஏமாற்றத்துடன் உள்ளனர். எவ்வாறாயினும், ஜனாதிபதிக்கும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான அரசியல் உறவுகள் சீர்குலைந்த போதிலும் அவர்கள் ஒன்றாக இருக்க வேண்டிய சூழல் எப்போதும் நிலவியது.

இந்நிலையில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல், ராஜபக்ஷக்களின் தலைமையின் கீழ் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு பெரும் சவாலாக அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு ஜனாதிபதி ரணில் பதவியை தக்கவைத்துக் கொள்ளும்பட்சத்தில் தனது வாக்குத் தளத்தை தக்க வைத்துக் கொள்ளமுடியாதோ என்ற அச்சமும் பொதுஜன பெரமுனவுக்கு உண்டு.

மக்கள் போராட்டத்தின் பின்னர் பெரும் பின்னடைவைச் சந்தித்த சிறீலங்கா பொதுஜன பெரமுன தற்போது தனது அடையாளத்தை மீளக் கட்டியெழுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரையில், ராஜபக்சக்களின் தலைமையின் கீழ் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு இடமளிப்பது ஒரு தந்திரமாகும். ராஜபக்ஷக்களுடன் மேலும் அடையாளப்படுத்தப்பட்டால், சிறுபான்மை வாக்காளர்களை, குறிப்பாக முஸ்லிம் வாக்குகளை ஜனாதிபதி இழக்க நேரிடும் என்றும் கருதப்படுகின்றது.

இதேவேளை, ஜனாதிபதிக்கு ஆதரவாக அனைத்து தேசியவாத சக்திகளையும் ஒன்றிணைக்கும் நடவடிக்கையில் மகாஜன எக்சத் பெரமுனவின் தலைவரான பிரதமர் தினேஷ் குணவர்த்தன தற்போது ஈடுபட்டுள்ளார் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

## இலங்கை...

நினைவு கூரும் வகையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

41 ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பில் தமிழ் பொது மக்களின் வர்த்தக நிலையங்களை இலக்குவைத்து தாக்குதல்கள் ஆரம்பமாகின. ஆயிரக்கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டன. அத்துடன், பல தமிழர்கள் காயமடைந்தனர். பலர் நாட்டிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

கறுப்பு ஜூலை எனப்படும் தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரம், பதற்றங்களை அதிகரித்தது. அது பின்னர் பல தசாப்தகால ஆயுதமோதலாகப் பரிணமித்தது. இலங்கையின் வரலாற்றில் மிகவும் இருண்ட அத்தியாயமாக அது விளங்குகின்றது.

இதனடிப்படையில் மே 18ஆம் திகதியை தமிழர் இனப்படுகொலை நினைவேந்தல் தினமாக அங்கீகரிக்கும் தீர்மானத்தைக் கனடாவின் பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றியது.

இது அர்த்தமற்ற வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்தவர்களை நினைவுகூருவதில் கனடாவின் அர்ப்பணிப்பை வெளிக்காட்டுவதாகக் கனடிய பிரதமர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஐ)

## அமைச்சரவையின்...

கூட்டத்தில் கருத்துகள் பரிமாறப்பட்டன. அத்துடன், அந்தத் தீர்மானத்தில் பல சட்ட சிக்கல்கள் இருக்கின்றன என்று அமைச்சரவை கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் ஆழமாக ஆராய்ந்த பின்னர், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பில் உள்ள சட்ட சிக்கல்கள் தொடர்பில் அமைச்சரவையின் பதிலை எதிர்வரும் இரு தினங்களில் வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு நேற்று பிற்பகல் அமைச்சரவைக்கு கிடைத்தமையால், அது தொடர்பான சட்ட சிக்கல்களை முழுமையாக ஆய்வு செய்வ தற்கு கால அவகாசம் தேவைப்படுவதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் இரண்டு தினங்களில் அமைச்சரவையின் பதிலை அறிவிப்பதே சிறந்தது என்பது அமைச்சரவையின் ஒருமனதான தீர்மானம்- என்றார்.

## மன்னிப்பு...

கோவிட் தொற்றால் உயிரிழந்து ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட முஸ்லிம் மக்களின் பெயர் பட்டியலை அரசாங்கம் வெளியிடவேண்டும். எல்லாவற்றையும் செய்துவிட்டு முஸ்லிம் சமூகத்திடம் மன்னிப்பு கோரிவிட்டு இதனை முடித்துக்கொள்ள முடியாது. இதற்கு காரணமானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார்.

முஜிபுர் ரஹ்மான் எம்.பி. கூறுகையில், தகனம் செய்தமைக்கு மன்னிப்பு கோர அரசாங்கம் தீர்மானத்துள்ளதன் மூலம் இந்த நடவடிக்கை பலவந்தமாக செய்யப்பட்டது என்பது உறுதியாகி இருக்கிறது. இதனை யார் செய்தார்கள் என்பதை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும் - என்றார்.

மரிக்கார் எம். பி. கூறுகையில், அரசாங்கத்தின் மன்னிப்பு கோரும் தீர்மானம் ராஜபக்ஷவினரை பாதுகாப்பதற்கான நடவடிக்கையாகும். தகனம் செய்ய எடுக்கப்பட்ட தீர்மானம் அரசியல் தீர்மானமாகும். இதற்கு காரணமானவர்கள் யார். அவர்களை இனம் கண்டு, வெளிப் படுத்த வேண்டும் - என்றார்.

அதாவுல்லா எம். பி. பேசுகையில், கோவிட் மரணங்களை எரித்தமை தொடர்பில் அமைச்சரவை மன்னிப்பு கோருவதற்கு எடுத்த தீர்மானத்துக்கு ஜனாதிபதி, பிரதமருக்கு எனது நன்றி கள் - என்றார். (ஐ)

## சட்டவிரோத...

இது தொடர்பான வழக்கு நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதில், குற்றஞ்சாட்டப்பட்ட மூவருக்கு எதிராக 14 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இந்த வழக்கில் குற்றவாளிகளாக இனங் காணப்பட்ட மூவருக்கும் தலா ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் வீதம் 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார் நீதிவான் எஸ். லெனின் குமார். (ஐ)

## தேர்தலை...

ஜனாதிபதியால் ஸ்திரப்படுத்த முடிந்துள்ளது. இதனால்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், தேர்தல் ஒத்திவைக்கப்படுமா என்ற விவாதம் நாட்டில் நிலவி வருகிறது. அத்துடன், பொதுத் தேர்தலா அல்லது ஜனாதிபதித் தேர்தலா என்பது குறித்தும் கலந்துரையாடப்படுகிறது. ஆனால், அரசாங்கம் என்ற ரீதியில் நாம் முதலில் ஜனாதிபதி தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்பதை முதலில் கூறவேண்டும். அரசமைப்பு ரீதியாக தேவையானது ஜனாதிபதித் தேர்தல். நாட்டில் ஸ்திரமற்ற நிலை ஏற்படும் போது, அது நேரடியாக மக்களை பாதிக்கிறது. எனவே இந்த நாட்டுக்கு நிலையான அரசாங்கம் தேவை.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் பொதுத் தேர்தலை நடத்தலாம். அரசமைப்புக்கு புறம்பாக செயல்பட்டு தேர்தலை ஒத்திவைக்க நாங்கள் எதிர்பார்க்கவில்லை - என்றும் அவர் கூறினார்.

## எமது...

வரப்பட்டு எங்க ள் தேசம் ஓர் இறைமையுள்ள தேசியமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் -என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர்,

"இலங்கையில் இனவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு அனைவரும் சம உரிமைகளுடன் வாழ வேண்டும் என்றால் ஒற்றையாட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து சமஷ்டி அரசமைப்பு கொண்டுவரப்பட வேண்டும்.

சமஷ்டி அரசமைப்பு ஊடாக தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அதன் ஊடாகவே நாட்டை ஆரோக்கியமான வளர்ச்சிப் பாதையில் கொண்டுசெல்ல முடியும்.

இராணுவம் எங்கள் தேசத்தின் மீது காடையர்கள் கொண்டு இன அழிப்பை கட்டவிழ்த்துவிட்டு பல்லாயிரக்கணக்கான தமிழர்களை கொன்ற ஒரு தினத்தை எம்மால் மறக்க முடியாது. வெலிகடை சிறையில் குட்டிமணி, தங்கத்துரை என்ற இரண்டு இளைஞர்கள் கண்கள் தோண்டப்பட்டு படுகொலைப்பட்ட சம்பவத்துக்கு நேற்று (நேற்றுமுன்தினம்) நீதி அமைச்சர் சபையில் மன்னிப்பு கோரினார்.

2009இல் மகிந்த மற்றும் கோட்டாபய தலைமையில் ஒன்றரை இலட்சம் தமிழர்களை கொண்ட இனப்படு கொலை இடம்பெற்றது. அவற்றுக்கெல்லாம் இன்னமும் நீதி கிடைக்கவில்லை. சிங்கள மக்களுடன் இணைந்து இந்த நாட்டை கட்டியெழுப்ப நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால், இந்த நாட்டில் ஒற்றையாட்சி முறை ஒழிக்கப்பட்டு சமஷ்டி அரசமைப்பு கொண்டுவரப்பட்டு எங்கள் தேசம் ஓர் இறைமையுள்ள தேசியமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இல்லாவிட்டால் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. ஒற்றையாட்சியை நிராகரிக்க நீங்கள் தயாராக இல்லை என்றால் அவர்களை தமிழ் மக்கள் ஆதரிக்கக் கூடாது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# புதிய விவாகரத்து சட்டமூலம் தயார்!

கொழும்பு, ஜூலை 25

விவாகரத்து சட்டத்தை முற்றிலுமாக நீக்கிவிட்டு, 'தவறு இல்லாத விவாகரத்து' என்ற புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

'தவறு இல்லாத விவாகரத்து' தொடர்பான வரைவு சட்டமூலம் ஏற்கனவே நிறைவடைந்துள்ளதாக அவர் கூறினார்.

திருமணம் முறிந்துவிட்டதாக நிரூபணமானால், விவாகரத்து வழக்குகளில் நீண்ட கால விசாரணைகள் இன்றி தீர்ப்பு வழங்க புதிய சட்டமூலம் நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

புதிய பரஸ்பர அங்கீகாரம், பதிவு செய்தல் மற்றும் வெளிநாட்டு தீர்ப்புகளை அமல்படுத்துதல் சட்டமூலம், விவாகரத்து வழக்குகளில் வெளிநாட்டு நீதிமன்றங்களில் வழங்கப்படும் தீர்ப்புகளை இலங்கை நீதிமன்றங்களில் ஏற்றுக்கொள்ள அனுமதிக்கும் என்றும் அவர் கூறினார். (அ)

## தங்கம் விலையில் திடீர் மாற்றம்!

கொழும்பு, ஜூலை 25

கடந்த நாட்களை விட நேற்று தங்கத்தின் விலை சற்று அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

இதன்படி, 22 கரட் தங்கத்தின் விலை 190,050 ரூபாவாக பதிவாகியுள்ளது.

மேலும் 22 கரட் தங்கம் ஒரு கிராமின் விலை 23,760 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அத்துடன் 24 கரட் தங்கத்தின் விலை 207,250 ரூபாவாகவும், 24 கரட் தங்கம் ஒரு கிராமின் விலை 25,910 ரூபாவாக காணப்படுகின்றது. (அ)

# தனது நிலைப்பாட்டை காலியில் சனியன்று அறிவிக்கிறார் ரணில்?

## மாபெரும் கூட்டத்துக்கு ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 25

**ஜனாதிபதி தேர்தலுக்குரிய நாள் நிர்ணயிக்கப்பட்ட பிறகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் முதலாவது பிரதான மக்கள் கூட்டம் நாளை மறுதினம் காலியில் நடைபெறவுள்ளது.**

**இவ்வாரத்துக்குள் ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினரான அமைச்சர் ரமேஷ் பத்திரன, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன ஆகியோரின் ஏற்பாட்டில் காலியில் குறித்த கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாரம் நடைபெறும் பாராளுமன்ற கூட்டத் தொடரின்போது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அறிவிப்பை வெளியிடுவதற்கு முன்னதாக ஜனாதிபதி திட்டமிட்டிருந்தார். எனினும், காலி கூட்டத்தில் அதற்கான அறிவிப்பை விடுக்குமாறு அவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, ஜனாதிபதி தேர்தல் தொடர்பான தனது நிலைப்பாட்டை எதிர்வரும் 27 ஆம் திகதி ஜனாதிபதி அறிவிக்கவுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட வேண்டும் என கோரி கம்பஹா, கடவத்தையில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேர்தலுக்கான நிதியினை விடுவிக்குமாறு நிதி அமைச்சுக்கு ஜனாதிபதி பணிப்புரை!

கொழும்பு, ஜூலை 25

ஜனாதிபதித் தேர்தலுக்குத் தேவையான நிதியினை விடுவிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான நிதியினை தாமதமின்றி விடுவிக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்ததாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்காக வரவு - செலவுத் திட்டத்தில் 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும் இடையில் அண்மையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்தது.

இதன்போது தேர்தல் செலவுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தேர்தல் கடமைகளுக்காக மதிப்பிடப்பட்ட நிதி தொடர்பாக 45 பொலிஸ் பிரிவுகளில் இருந்து அறிக்கைகள் கோரப்பட்டுள்ள அதேவேளை அதன் அறிக்கைகள் கிடைக்கபெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.


கிடைத்துள்ள அறிக்கைகளின் அடிப்படையில் இறுதி செலவு மதிப்பீடு தயாரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)


## தமிழ் தேசிய வீரர்கள் தினம்


(ஆடி 25 - ஆடி 27)

41 வது நினைவு அஞ்சலி

1983 ஆடித் திங்கள் வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் தங்கதுரை, தளபதி குட்டிமணி, ஜெகன், தேவன், நடேசுதாசன், சிவபாதம், சிறீக்குமார், குமார், மரியாம்பிள்ளை, குமாரகுலசிங்கம் உட்பட 53 தமிழ் அரசியல் கைதிகளுக்கும் எமது அஞ்சலிகள்



தலைவர்
தங்கத்துரை



தளபதி
குட்டிமணி



முன்னணிப் போராளி
ஜெகன்

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO)

இணையம் : www.telo.org


# 22ஆவது திருத்த சட்ட வாக்கெடுப்பை எதிர்க்கட்சிகள் புறக்கணிக்கவேண்டும்

## சுமந்திரன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜூலை 25

22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு எடுத்துக் கொள்ளப்படும் பட்சத்தில் எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்ய வேண்டுமென இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கோரியுள்ளார்.

தனது எக்ஸ் தளத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தமானது வாக்காளர்களைக் குழப்புவதற்கான முயற்சி எனவும், ஜனாதிபதித் தேர்தல் செயல்முறையை அது சிக்கலாக்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுமாயின் பொதுசன



வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அதற்கான திகதியை முடிவு செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்புத் தினத்துடன் முரண்படும் வகையிலான திகதியை ஜனாதிபதி நிர்ணயிக்கக் கூடும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் அச்சம் வெளியிட்டுள்ளார். (அ)

# சஜித் தலைமையில் கூட்டணி ஓகஸ்ட் 08ஆம் திகதி உதயம்!

கொழும்பு, ஜூலை 25

சஜித் பிரேமதாச தலைமையில் புதிய பல கட்சிகள் மற்றும் அமைப்புகளின் இணைவுடன் அமையவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி எதிர்வரும் ஓகஸ்ட் 08 ஆம் திகதி மலரவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளன எனவும், ஓகஸ்ட் 08 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது எனவும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினமே டலஸ் அழகப்பெரும, சரதி ஹேரத் உள்ளிட்டவர்கள் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணையவுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்கவும் தமது அமைப்பு சகிதம் இக்கூட்டணியில் இணைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சுதந்திரக்கட்சியின் செயலாளர் பதவியில் தொடர்வதற்கு தயாசிறி ஜயசேகரவுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதால், அவர் பிரிதொரு சந்தர்ப்பத்திலேயே சஜித் தரப்புடன் இணைவார் என தெரியவருகின்றது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org